விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 169 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 232 புதன்கிழமை (05.06.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005


இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## பா.ஜ.க கூட்டணி வெற்றி

# 3வது முறையாக பாரதத்தின் பிரதமராகின்றார் மோடி


(புதுடில்லி)

நடந்த முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க கூட்டணி முன்னிலையில் உள்ளது. பா.ஜ.க கூட்டணி ஆட்சி அமைக்கவுள்ள நிலையில் 3ஆவது முறையாக பாரதத்தின் பிரதமராக மோடி பதவியேற்கவுள்ளார். இன்றைய தினம் புதுடில்லியில் அமைச்சரவைக் கூட்டம் இடம்பெறவுள்ளதோடு கூட்டணிக்கான பேச்சுவார்த்தையும் நடைபெறும். (15ஆம் பக்கம் பார்க்க)



## ஐ.எம்.எப் ஒப்பந்தங்களை மீறினால் நாடு பின்னோக்கிச் செல்லும்

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

சர்வதேச நாணய் நிதியத்துடனான ஒப்பந்தங்கள் மீறப்படுமானால் நாடு பின்னோக்கிச் செல்லும்.

எனவே அந்த உடன்படிக்கைகள் அனைத்தையும் அமுல்படுத்த, பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பொருளாதார பரிமாற்ற சட்ட 15

## தமிழ்நாட்டின் 40 தொகுதிகளிலும் தி.மு.க.கூட்டணி வெற்றி

(சென்னை)

தமிழ்நாட்டின் 40 தொகுதியிலும் தி.மு.க. கூட்டணி வெற்றி பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

தமிழ்நாட்டில் 39 தொகுதிகள் 15

## நம்பிக்கை வைத்த மக்களை வணங்குகின்றேன்

### தேர்தல் முடிவுகளின் பின் மோடி

(புதுடில்லி)


மூன்றாவது முறையாக தேசிய ஜனநாயகக் கூட்டணி (NDA) மீது மக்கள் நம்பிக்கை வைத்ததற்கு தலைவணங்குவதாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

தேர்தல் முடிவுகளுக்கு பின்னர் தனது 'X' தளத்தில் வெளியிட்ட பதிவிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இந்திய 15

## தமிழர்கள் அடக்கப்பட்டால் ஏனைய இனங்கள் நிம்மதியாக வாழ முடியாது

### சிறீதரன் எம்.பி



(கொழும்பு)

தேசிய இனமான தமிழினம் அச்சுறுத்தப்பட்டு எப்பொழுதும் நிலம் பறிக்கப்பட்டு இராணுவ பிடிக்குள் வைக்கப்பட்டு அடக்கப்படுகின்றபோது அவர்களுடைய நிம்மதியற்ற வாழ்வு என்பது ஏனைய இனத்தையும் இந்த மண்ணிலே நிம்மதியாக வாழவிடாது என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள் 15

## லிட்ரோ, லாஃப்

# சமையல் எரிவாயு விலை குறைந்தது

(கொழும்பு)

லிட்ரோ, லாஃப் சமையல் எரிவாயு விலை குறைவடைந்துள்ளது.

லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலையை குறைக்க லிட்ரோ நிறுவனம் தீர்மானித்துள்ளது.

தற்போது 4,115 ரூபாய்க்கு விற்கப் 15

## ஹெரோயினுடன் வவுனியாவில் யுவதி கைது

(வவுனியா)

வவுனியாவில் 50 கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் 24 வயது யுவதி ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா தலை 15

## பாரதப் பிரதமர் மோடிக்கு ஜனாதிபதி ரணில் வாழ்த்து

(கொழும்பு)

பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தேர்தல் வெற்றிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வாழ்த்து தெரிவித்துள்ளார்.

நரேந்திர மோடியின் தலைமையின் கீழ் முன்னேற்றம் மற்றும் செழிப்பு ஆகியவற்றில் இந்திய மக்கள் வெளிப்படுத்திய நம்பிக்கையை ஜனாதிபதி அங்கீகரித்ததோடு,

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகளில் தொடர்ச்சியான வளர்ச்சியில் நம்பிக்கையை வெளிப்படுத்தினார். (ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாகபூஷணி திருமண சேவை

(பதிவுக்கட்டணங்கள் யாவும் இலவசம்)

மிகப்பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தெரிவு செய்யப்பட்டு மிகத் துரிதமாகத் திருமணம் நிறைவேற்றிக் கொடுக்கப்படும்.

உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளனர்

10/2, முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்


(BCAS கம்பஸுக்கு பக்கத்து லேன்)

021 222 9306, 077 138 7596, 071 999 9306

(1096)


## மரண அறிவித்தல்





**செல்வி கிப்போலிட்டா மனுவேல்பிள்ளை**

(ஓய்வுபெற்ற ஆசிரியை, திருக்குடும்ப கன்னியர் மடம் யாழ்ப்பாணம்)

மலர்வு 11.07.1944 உதிர்வு 03.06.2024

**திரு. பிலிப் அன்ரூ மனுவேல்பிள்ளை**

(ஓய்வுபெற்ற நீர்வள பரிசோதகர்)

மலர்வு 31.07.1963 உதிர்வு 04.06.2024

செல்வி. கிப்போலிட்டா மனுவேல்பிள்ளை அவர்கள் 03. 06. 2024 அன்று கொழும்பில் இறைபதம் அடைந்தார்.

திரு. பிலிப் அன்ரூ மனுவேல் பிள்ளை 04.06.2024 அன்று இறைபதம் அடைந்தார்.

இவர்களின் இறுதி அஞ்சலி திருப்பலியானது இன்று வியாழக்கிழமை 05.06.2024 பி. ப. 3.00 மணிக்கு யாழ் குருநகர் புதுமை மாதா ஆலயத்தில் ஒப்புகொடுக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார். உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(C-0526)

## மரண அறிவித்தல்

தோற்றம் 13 - 01 - 1948



மறைவு 04 - 05 - 2024

**திருமதி சூசைப்பிள்ளை அந்தோனியாப்பிள்ளை**

(பூக்குட்டி)

சில்லாலை கீரியன்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாவும் கொண்ட திருமதி சூசைப்பிள்ளை அந்தோனியாப்பிள்ளை (பூக்குட்டி) 04.06.2024 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிலிப்புப்பிள்ளை - றோசமுத்து தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவரான நீக்கிலாப்பிள்ளை சூசைப்பிள்ளை (பாலன்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவரான சூசைப்பிள்ளை, மரியம்மா, யோசப் செல்வநாயகம் (சந்திரன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் மேரி கேறுட் சோஜினி (லண்டன்), காலஞ்சென்ற கொண்செற்றா பிரியதர்சினி, யூட் அசோக்குமார் (லண்டன்), அன்ரனிஸ்ரா லோஜினி (அருட்சகோதரி மேரி றூபினி, அப்போஸ்தலிக்க கார்மேல்சபை, லூத்துமடம் கரவெட்டி), றொபேட் ராஜ்குமார் ஆகியோரின் அன்புத் தாயாரும். சுதாகரன் (லண்டன்), ஜீவானந்தம் (கனடா), சத்தியவாணி ஜெனிபர் (லண்டன்), ஆன் சுதாசினி ஆகியோரின் மாமியும் கபிலன், பற்றிக், ஜஸ்ரின், ஜெனிபர், ஜெஸ்மிரா, ஜெரோமி, டயானா கீர்த்தி, லோகேந்திரன், நென்சி கீர்த்தனா, ஜேசன், யுகேந்திரன், மேரி றொசானி, ஆன் றொபினா, போல் றொபின்சன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்கம் இன்று (05.06.2024) புதன்கிழமை மாலை 3.00 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து சில்லாலை கதிரை அன்னை ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, கதிரை மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சில்லாலை.

தகவல்:
குடும்பத்தினர்

(C-0523)


## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் கைதடி சந்தி அருகாமையில் A9 வீதி முகப்புடன் 32 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பதினெட்டடிப் பாதை (18)
- கைதடி சந்தி 100m தூரம்
- சித்த வைத்தியசாலை முன்பாக
- பார்வை நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை
- நகர அபிவிருத்தி அதிகார சபையின் (UDA) அனுமதி பெற்றது

(குரு) 077 029 4164, 077 329 4130, 077 294 1521

(1105)


## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**திருமதி தவச்செல்வம் சிவமணி**

பிறப்பு 1947.08.17 இறப்பு 2022.05.29

எங்கள் குடும்ப குலவிளக்கே அம்மா!
எங்கள் நெஞ்சறைக் கூட்டில் அழியாத
ஓவியம் நீங்கள்அம்மா! உங்களை
நினைத்து நெஞ்சம் துடிப்பதென்ன
ஒருமுறை உன் அன்பு முகம் காண
ஓடோடி வரமாட்டாயோ அம்மா!

(C-525)

மந்திகை,
புலோலி தெற்கு, புலோலி.

தகவல்:
குடும்பத்தினர்

## 1 ஆம் ஆண்டு ஆத்ம சாந்தி பிரார்த்தனை அழைப்பு

தோற்றம் 09 . 06 . 1961



மறைவு 18 . 05 . 2023

**அமரர் செல்லத்துரை ஜெயரட்ணம்**

(ஜெயா தச்சுத்தொழிலக உரிமையாளர்)

தலைவனாய் தரணி போற்றும் தந்தையாய்
நிலந்தனிலே என்றும் நிறைவோடு வாழ்ந்தவரே
நன்றாய் வளர்த்து நல்லவழிகள் காட்டியெம்மை
வாழ வைத்த தெய்வமே
என்றினி உங்கள் எழில் வதனம் காண்போம்

அவர்களின் முதலாம் ஆண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனை(திவசம்) இன்று 05.06.2024 புதன்கிழமை மு.ப 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அந் நிகழ்வில் கலந்து கொண்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

வராத்துப்பளை,
பருத்தித்துறை.

077 419 8215

இங்ஙனம்
குடும்பத்தினர்

(C-0527)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சார சட்டமூலம்

## அரசியலமைப்பிற்கு முரணானது!

### உயர் நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

இலங்கை மின்சார சட்ட மூலத்தின் பல சரத்துக்கள் அரசியலமைப்பிற்கு முரணானது என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அரசாங்கத்தினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த மின்சார சட்டமூலத்திற்கு எதிரான மனு விசாரணையின் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு சபாநாயகரால் நேற்று சமர்ப்பிக்கப்பட்டது.

இதன்போதே, சபாநாயகர் மஹிந்த யாபா அபேவர்தன இதனை தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் சிறப்பு பெரும்பான்மை மற்றும் வாக்கெடுப்பு மூலம் மட்டுமே சட்ட மூலம் நிறைவேற்றப்பட வேண்டும் என உயர்நீதிமன்ற தீர்ப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் இதன் போது தெரிவித்தார்.

மேலும் , உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி, குறித்த சரத்துக்கள் திருத்தப்பட்டால் சட்டமூலம் எளிய பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படும் என அவர் குறிப்பிட்டார். (நி)

# சீரற்ற வானிலையால் இதுவரை

# 26 பேர் உயிரிழப்பு

**(கொழும்பு) — நாட்டில் நிலவிவரும் மழையுடனான வானிலை காரணமாக இதுவரை 26 பேர் உயிரிழந்துள்ளதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய போதே பிரமித்த பண்டார இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது " சீரற்ற காலநிலையால் இதுவரை 26 பேர் உயிரிழந்துள்ளதோடு 41 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

23 மாவட்டங்களில் 262 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 33 ஆயிரத்து 422 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 30 ஆயிரத்து 21 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்" என பிரமித்த பண்டார தெரிவித்துள்ளார். (நி)



# 210 நபர்களின் சொத்துக்கள் முடக்கம்

### அரசாங்கம் நடவடிக்கை

(கொழும்பு)

பயங்கரவாத மற்றும் தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்ட 15 அமைப்புகள் மற்றும் 210 நபர்களின் அனைத்து நிதி மற்றும் சொத்துக்களை முடக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன வெளியிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

2012 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க ஐக்கிய நாடுகளின் கட்டளைகளுக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும், பயங்கரவாத நடவடிக்கைகள் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியுதவி செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட 113 பேரின் அனைத்து பணம் மற்றும் சொத்துக்களும் முடக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (நி)

# வெள்ளம் பார்க்க படகில் சென்ற குழு

### படகோட்டி பரிதாப பலி

(கொழும்பு)

வெள்ளத்தை பார்ப்பதற்காக படகு ஒன்றில் 20 பேர் கொண்ட குழு ஒன்று சென்ற போது குறித்த படகு உயர் மின்கம்பியில் மோதி மின்சாரம் தாக்கியதில்,ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் ஏனையோர் உயிர் தப்பியுள்ளதாக புலத்சிங்கள பொலிஸார் தெரிவித்தனர்.

புலத்சிங்கள - திவலகட பிரதேசத்தைச் சேர்ந்த லொகு சின்ஹாரச்சிகே தமித் குமார என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அந்த இளைஞன் சுமார் இருபது பேர் கொண்ட குழுவுடன் நேற்று முன்தினம் மாலை வெள்ளத்தைப் பார்ப்பதற்காக படகில் சென்றுள்ளார்.

குறித்த குழுவினர் பயணித்த படகை உயிரிழந்த இளைஞன் ஓட்டிச் சென்றதுடன், துடுப்பை ஏந்திய போது, உயர் நிலை மின் கம்பியில் மோதி வெள்ளத்தில் விழுந்துள்ளார்.

படகில் இருந்தவர்களும் மின்சாரம் தாக்கி படகிற்குள் விழுந்ததாகவும், ஆனால் அவர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லையென்றும் பொலிஸார் தெரிவித்தனர். (நி)

# விடைத்தாள் மதிப்பீட்டு பணிகளில் மாற்றம்

### பரீட்சைத் திணைக்களம் அறிவிப்பு


(கொழும்பு)

மோசமான வானிலை காரணமாக, க.பொ. த சாதாரண தர பொதுத் தேர்வு விடைத்தாள்கள் மதிப்பீடு தொடங்கும் திகதியை மாற்றியமைக்க உள்ளதாக பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி விடைத்தாள் மதிப்பீட்டில் ஈடுபட உள்ள அதிகாரிகளுக்கு ஏற்படும் சிரமங்களை கருத்தில் கொண்டு, ஜூன் 6 ஆம் திகதி தொடங்க இருந்த முதல் கட்ட மதிப்பீட்டு பணியை ஜூன் 8 ஆம் திகதி தொடங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, முதல் கட்ட விடைத்தாள் மதிப்பீடு ஜூன் 8 ஆம் திகதி முதல் ஜூன் 17 ஆம் திகதி வரை நாடளாவிய ரீதியில் 101 மையங்களில் நடைபெறும் என்று பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி)

# ஜனாதிபதி டில்லி விஜயம்



(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இரண்டு நாள் உத்தியோகப்பூர்வ விஜயத்தை மேற்கொண்டு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இந்தியாவுக்கு செல்லவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியாவின் புதிய பிரதமருக்கு நேரடியாக சென்று வாழ்த்து கூறும் வகையில் ரணிலின் டில்லி விஜயம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் இந்த விஜயமானது இருநாடுகளின் உறவுகளின் வலுவான நிலையையும் இலங்கையின் பொருளாதார மீட்சியில் இந்தியாவின் ஒத்துழைப்புகள் இன்றியமையாத ஒன்று என்பதையும் எடுத்துக்காட்டும் வகையில் அமைந்துள்ளது. (நி)

# பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

புதிய கல்வியாண்டுக்கான மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிப்பதற்கான விண்ணப்பங்களை இம்மாதம் 14ஆம் திகதி முதல் ஜூலை மாதம் 5 ஆம் திகதி வரை கோருவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

பல்கலைக்கழக அனுமதிக்கான கையேடு இம்முறை ஆணைக் குழுவின் www.ugc.ac.lk என்ற இணையத்தளத்தில் மட்டுமே கிடைக்கும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் வேலை நிறுத்தம் காரணமாக இம்முறை கையேட்டை அச்சிட முடியவில்லை என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை விண்ணப்பத்தில் ஏதேனும் திருத்தங்கள் இருந்தால், அதற்கு மேலும் மூன்று வார கால அவகாசம் வழங்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது.

அதாவது, ஜூலை 19 ஆம் திகதி வரை விண்ணப்பதாரர்கள் ஒருமுறை மட்டுமே திருத்தங்களைச் செய்ய முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் கோரப்பட்டு ஓகஸ்ட் கடைசி வாரம் அல்லது செப்டெம்பர் முதல் வாரத்தில் மாணவர் சேர்க்கைக்கான குறைந்தபட்ச மதிப்பெண்களை வெளியிடவும் ஆணைக் குழு திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# 6 விக்கெட்டுக்களால் இலங்கையை வீழ்த்திய தென்னாபிரிக்கா



நியூயோர்க்கில் நடந்த "டி" பிரிவு லீக் போட்டியில் இலங்கை, தென் ஆபிரிக்கா அணிகள் மோதின.

டொஸ் வென்று முதலில் "பட்" செய்த இலங்கை அணியை பதும் நிசங்கா ஏமாற்றினார்.

நார்ட்ஜே "வேகத்தில்" கமிந்து மெண்டிஸ் (11) வெளியேறினார். கேஷவ் மஹாராஜ் வீசிய 9 ஆவது ஓவரில் கப்டன் வனிந்து ஹசரங்கா (0). சதீரா சமர விக்ரமா (0) அவுட்டாகினர். தொடர்ந்து மிரட்டிய நார்ட்ஜே பந்தில் குசால் மெண்டிஸ் (19). சரித் அசலங்கா (6) "பெவிலியன்" திரும்பினர்.

பின் இணைந்த அனுபவ மாத்யூஸ் (17), தசுன் ஷனகா (9) ஜோடி சோபிக்கவில்லை.

இலங்கை அணி 19.1 ஓவரில் 77 ரன்னுக்கு "ஓல்-அவுட்" ஆனது. தீக் ஷனா (7) அவுட்டாகாமல் இருந்தார். சுலப இலக்கை விரட்டிய தென் ஆபிரிக்க அணிக்கு ரீசா ஹென்டி ரிக்ஸ் (4) ஏமாற்றினார். கப்டன் மார்க்ரம் (12) நிலைக்கவில்லை. மாத்யூஸ் பந்தை சிக்சருக்கு அனுப் பிய குயின்டன் டி காக் (20), ஹசரங்கா விடம் சரணடைந்தார். ஸ்டப்ஸ் 13 ரன்னில் ஆட்டமிழந்தார். ஹசரங்கா வீசிய 15 ஆவது ஓவரில் வரிசையாக ஒரு சிக்சர், ஒரு பவுண்டரி விளாசினார் கிளாசன். ஹசரங்கா பந்தை பவுண்டரிக்கு விரட்டிய மில்லர் வெற்றியை உறுதி செய்தார். தென் ஆபிரிக்க அணி 16.2 ஓவரில் 4 விக்கெட்டுக்கு 80 ரன் எடுத்து வெற்றி பெற்றது. கிளாசன் (19), மில்லர் (6) அவுட்டாகாமல் இருந்தனர். (நி)

## கோலிக்கு ஐ.சி.சி விருது

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.,) சார்பில் ஒவ்வொரு ஆண்டும் சிறந்த வீரர், வீராங்கனைகளுக்கு விருது வழங்கி கௌரவிக்கப்படும். கடந்த ஆண்டுக்கான விருதுக்கு தேர்வான வர்களின் பட்டியல் வெளியானது. இதில் ஒருநாள் போட்டியின் சிறந்த வீரராக இந்தியாவின் விராட் கோலி தேர்வானார்.

கடந்த ஆண்டு கோலி விளையாடிய 27 ஒருநாள் போட்டியில், 6 சதம், 8 அரைசதம் உட்பட 1377 ரன். (சராசரி 72.47, "ஸ்டிரைக் ரேட்" 99.13) விளாசினார். இதில் சொந்த மண்ணில் நடந்த ஐ.சி.சி., உலக கோப்பையில் (50 ஓவர்) 765 ரன் குவித்த கோலி, தொடர் நாயகன் விருதை தட்டிச் சென்றார். தவிர ஒருநாள் போட்டியில் அதிக சதம் (50) விளாசிய வீரர்கள் வரிசையில் சச்சினை (49 சதம்) முந்தினார்.

இதற்கான விருதை கோலி பெற்றுக் கொண்டார். கடந்த ஆண்டின் சிறந்த ஐ.சி.சி., ஒருநாள் போட்டி அணிக்கு தேர்வு செய்யப்பட்டி ருந்ததுடன் இதற்கான தொப்பியையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத் தக்கது. (நி)





## வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம்
02 - 04 - 1930

மறைவு
07 - 05 - 2024

கடந்த 07.05.2024 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

### அமரர் சுப்பிரமணியம் கணேசன்

திதி : 06.06.2024

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 04.06.2024 செவ்வாய்க்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய கிரியைகள் 06.06.2024 வியாழக்கிழமை பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்

நுணாவில் கல்வயல் வீதி,
சாவகச்சேரி.

(C-0528)

இங்ஙனம்:-
குடும்பத்தினர்



'நான் கொடுப்பதற்கு பழகிக் கொண்டேன் - காரணம் என்னிடம் அதிகம் இருப்பதால் அல்ல - இல்லாதவரின் வலியைப் புரிந்து கொண்டதால்'

## (22) விற்பனைக்கு (22)

யாழ்.வைத்தியசாலை வீதியில் வைத்திய சாலைக்கு முன்பாக 4 பரப்புக் காணியும், யாழ். வைத்தியசாலை வீதியில் நமசிவாயம் பாடசாலைக்கு முன்பாக 4 பரப்பு 4 குழி காணியும், யாழ்.மின்சார நிலைய வீதியில் பழைய தபாற் கந்தோர் வீதியில் 4½ பரப்புக் காணியும், யாழ். விக்டோரியா வீதியில் 12 பரப்புக் காணியும், யாழ். வைத்தியசாலை வீதியில் 20 அடி அகலமும் 200 அடி நீளமும் கொண்ட காணித் துண்டும், யாழ். தட்டார்தெருச் சந்திக்கு அண்மையில் 2½ பரப்புக் காணியும், யாழ்.பெரியகோயிலுக்கு அண்மையில் குருசோ வீதியில் 6 பரப்புக் காணியும் 3 பெரிய நவீன பெரிய மாடி வீடும், மன்னார் நகருக்கு அண்மையில் நல்ல நிலையில் இயங்கிவரும் மில்லும், யாழ்.கொட்டடியில் சுற்றுமதிலுடன் ஐந்து பரப்புக் காணியும், வவுனியா A9 வீதியில் ஓமந்தை பொலிஸ் டேசனுக்கு முன்பாக 150 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

### கனகசபை தர்மகுலசிங்கம்

**144, Brown Road, Jaffna.**

**0777 232 535**

(1103)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரற்ற காலநிலையால் தர்ப்பூசணி செய்கை பாதிப்பு

## கவலையில் விவசாயிகள்


(தருமபுரம்)

மழை காரணமாக தர்ப் பூசணி செய்கை பாதிக்கப் பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்ற னர்.

முல்லைத்தீவு மாவட்டத் தின் விசுவமடு தொட்டியடி பிரதேசத்தில் இம்முறை விவசாயிகள் தர்ப்பூசணி செய்கையும் மேற்கொண்டி ருந்தனர்.



கடந்த சில தினங்களாக அறுவடைக்கு தயார் நிலை யில் இருந்த தர்ப்பூசணிகள் மழை காரணமாக அனேக மானவை அழுகி அழி வடைந்துள்ளன. இதனால் பல இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக விவசா யிகள் தெரிவிக்கின்ற னர். (நி-316)


**அருள்மிகு காளி அம்பாள் தேவஸ்தானம்**
**திருவண்ணை கன்னாதிட்டி யாழ்ப்பாணம்**

**திரிதள இராஜகோபுர கும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா விஞ்ஞாபனம்**

**கர்மாரம்பம்**
**07.06.2024 வெள்ளிக்கிழமை**
காலை 6.00 மணி-7.00 மணி
**யாகாரம்பம்**–மாலை 4.00 மணி
கலசம் வைத்தல்
மாலை 5.00- 6.00 மணி

**யாகபூஜை**
**08.06.2024 சனிக்கிழமை**
காலை 9.00 மணி
மாலை 6.00 மணி

**கும்பாபிஷேகம்**
**09.06.2024 ஞாயிற்றுக்கிழமை**
காலை (மு.ப) 10.38 மணி
தொடக்கம் 11.26 மணி

**அம்பிகை அடியார்களே!**

நிகழும் சர்வமங்களகரமான குரோதி வருடம் வைகாசித்திங்கள் 27 ஆம் நாள்(09.06.2024) ஞாயிற்றுக்கிழமை புநர்பூச நட்சத்திரமும் திருதியை திதியும்,சித்த யோகமும் கூடிய முற்பகல் 10.38 மணி முதல் 11.26 மணி வரையுள்ள சிங்க லக்கின சுபவேளையில் காளி அம்பாளின் புதிய திரி (மூன்று) தள இராஜகோபுர கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கூடியுள்ளது. காலை 8.00 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும், 9.00 மணிக்கு இராஜகோபுர யாக மஹாபூர்ணாகுதியும் நடைபெற்று மு.ப 10.00 மணிக்கு அம்பாள் வீதிவலம் வருதல், இராஜ கோபுர பிரதான கும்பங்கள் வீதி வலம் வருதல் தொடர்ந்து குறிப்பிட்ட சுப வேளையில் இராஜகோபுர கும்பாபிஷேகம் நடைபெறும். அடியார்கள் ஆசாரசீலர்களாக வருகை தந்து அன்னையின் கிருபாகடாட்சம் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

**தொ.பே: 021 222 5770**

(1050)

**–தேவஸ்தான ஆதீனகர்த்தாக்கள்.**


# இராசிபலன்

05.06.2024
வைகாசி 23 , புதன்கிழமை
சதுர்தசி முன்னிரவு -7.55 மணிவரை
கார்த்திகை முன்னிரவு -9.32 மணிவரை

சுபநேரம் -4.22-5.52 மணிவரை
இராகுகாலம்-11.52-1.22 மணிவரை
கார்த்திகை விரதம், அமிர்தசித்தம்

சந்திராஷ்டமம் - உத்தரம், அத்தம்.

**வளவன்**




சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், காலைப்பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் உருவாகும்.




உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங் கண்டு கொள்வீர்கள், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம்.




அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.




மற்றவர்கள் கடுமையாக நினைக்கும் வேலையொன்றை நீங்கள் எளிதாகச் செய்து முடிப்பீர்கள், பணப் புளக்கம் அதிகரிக்கும் நாள், காரிய அனுகூலமுண்டு.




செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், போசன சுகமுண்டு, தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.




பிரிந்து சென்றவர்கள் பிரியமுடன் வந்திணைவர், அதிகம் செலவாகும் என நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடிவுக்கு வரலாம், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.




ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், உடல் நலனில் கவனம் தேவை.




தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், முயற்சிகள் கைகூடும்.




புகழ்மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வியாபார விரோதம் விலகும், அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும், இனத்தார் பகைமாற எடுத்த முயற்சிகள் கைகூடும்.




பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், தாழ்ந்த சுபாவமுண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு.




உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக செயற்படுவர், செய்தொழிலில் மேன்மையுண்டு.




தொழில் முயற்சியில் எதிர்பார்த்த சில நல்ல திருப்பங்களைக் காணலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், நண்பர்கள் வட்டம் விரிவடையும் நாள்.

[illegible] கேட்காத போது சொல்லாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதைக்கு அடிமையான மகனை மீட்டுத் தருமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

போதைக்கு அடிமையான மகனை, போதைப்பழக்கத்தில் இருந்து மீட்டு தருமாறு தாயார் கோரியதை அடுத்து, இளைஞனை மீட்டு நீதிமன்றின் ஊடாக புனர்வாழ்வு முகாமிற்கு பொலிஸார் அனுப்பி வைத்துள்ளனர்.

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வசிக்கும் தாயொருவர், தனது மகன் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளார். அவரை அந்த பழக்கத்தில் இருந்து மீட்டுத் தருமாறு மானிப்பாய் பொலிஸாரிடம் கோரியுள்ளார்.

அதனை அடுத்து இளைஞனை கைது செய்த பொலிஸார் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தி நேற்று நீதிமன்றின் ஊடாக கந்தக்காடு மறுவாழ்வு மையத்திற்கு அனுப்பி வைத்துள்ளனர். (நி-33)

## தேசிய விருது வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சமூக சேவையாளர்களையும், பல்துறை சார்ந்தவர்களையும் கௌரவிக்கும் "தேசமானக்க " தேசியவிருது வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி ஶ்ரீ கண்டாச்சி அம்பாள் மண்டபத்தில் நடைபெறும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (நி)

# இரணைமடு நீர்ப்பாசனத்திற்கு நிரந்தர பொறிமுறை அவசியம்

## கிளி.மாவட்ட பதில் அரசாங்க அதிபர்

(முறிகண்டி)

இரணைமடு நீர்பாசனத்திற்கு நிலையான பொறிமுறை ஏற்படுத்தப்பட வேண்டும் என கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் தெரிவித்துள்ளார்.

வெளிகண்டல் பகுதியில் நெற்செய்கையில் ஏற்பட்டுள்ள முரண்பாட்டினை தீர்க்கும் விசேட கலந்துரையாடலில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்திற்கு இரணைமடுக் குளம் வரப்பிரசாதமானது. குறித்த குளத்திலிருந்து மேற்கொள்ளப்படும் விவசாயம் என்பது மாவட்டத்தில் முக்கிய இடமாக உள்ளது.

ஆனால், குறித்த குளத்தின் கீழ் சிறுபோக செய்கை மேற்கொள்வதற்கான நிரந்தர பொறிமுறை இல்லை. வருடா வருடம் ஒவ்வொரு பிரச்சினை எழுகின்றது.

இரணைமடுக் குளத்தின் நீர் குறிப்பிட்ட சிலருக்கு மாத்திரம் சென்றடையாது, பரந்துபட்ட மக்களிற்கும் கிடைக்கும் வகையில் இதற்கு நீர்பாசன திணைக்களம், கமநல சேவைகள் திணைக்களத்தின் ஆலோசனையுடன் விவசாயிகளையும் உள்ளடக்கி நிரந்தர பொறிமுறையை உருவாக்க வேண்டும என அவர் தெரிவித்தார். நி-100)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 350 | 450 | 350-450 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 200 | 180 |
| பச்சைமிளகாய் | 200 | 70 | 200 | 180 |
| தக்காளி | 200 | 250 | 300 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 130 | 140 | 150 | 130 |
| கோவா | 300 | 200 | 300 | 200 |
| கரட் | 250 | 260 | 300 | 250 |
| பூசணி | 120 | 120 | 130 | 80 |
| புடோல் | 200 | 180 | 150 | 130 |
| வாழைக்காய் | 100 | 130 | 120 | 80 |
| சின்ன வெங்காயம் | 300 | 350 | 400 | 350-450 |
| பெரிய வெங்காயம் | 250 | 250 | 230 | 240 |
| பாகற்காய் | 600 | 1000 | 850 | 600 |
| வெண்டக்காய் | 150 | 250 | 150 | 200 |
| கருணைக் கிழங்கு | 200 | 200 | 120 | -- |
| பயற்றங்காய் | 200 | 150 | 150 | 150-200 |
| லீக்ஸ் | 500 | 500 | 600 | 350 |
| பீற்றூட் | 450 | 400 | 480 | 300 |
| கறிமிளகாய் | 500 | 600 | 550 | 400 |
| முருங்கைக்காய் | 800 | 500 | 600 | 300-500 |
| போஞ்சி | 600 | 700 | 900 | 400 |
| கத்தரிதம்புள்ள | 350 | 300 | 350 | -- |
| கீரை - 1 பிடி | 60 | 100 | 100 | 120-140 |
| தேசிக்காய் | 1000 | 800 | 1000 | 700-900 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 110 | 80-100 | 50-90 |
| இராசவள்ளி | 350 | 450 | 450 | -- |
| வெங்காயப்பூ | 700 | 400 | 600 | -- |
| முள்ளங்கி | 200 | 300 | 250 | 80 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 100 | 100 |
| வல்லாரை | 60 | 200 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | 450 | 100 | 80 |

## வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான இரண்டாவது வினைத்திறன் காண் தடைப்பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு எதிர்வரும் 8 ஆம், 9 ஆம் திகதிகளில் யாழ். பிரதேச செயலகத்தில் நடைபெறும். மேலதிக விபரங்களுக்கு 071 - 990 9105, 077-060 9105 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (நி)

## குருபூசை தினம்

(யாழ்ப்பாணம்)

தவத்திரு மார்க்கண்டு சுவாமியின் நாற்பதாவது ஆண்டு குருபூசைத் தினம் இன்று யாழ்ப்பாணம் கைதடியில் நடைபெறவுள்ளது.

இன்று காலை 10 மணிக்கு நற்சிந்தனைப் பாராயணமும், 11.30 மணிக்கு அபிஷேக ஆராதனையும் இடம் பெறும். தொடர்ந்து குருபூசை மலர் வெளியிடப்படும்.

இதனையடுத்து, நற்சிந்தனை பாடல் போட்டியில் பங்கு பற்றிய சிறார்களுக்கு பரிசில்களும் வழங்கப்படவுள்ளதாக [illegible]

## உயர்தர பரீட்சை பெறுபேறுகள்-2023

### யா/விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்.

**உயிரியல் பிரிவு**

அ.லச்சிகா-3ஏ, யோ.ஜக்ஷயன்- 3ஏ, கு.மிதுனன்-2ஏபி, சூ.சாரங்கன்-2ஏபி, தி.பிரணவன்-ஏபிசி, கெ.டிசாந்-2ஏசி

**கணிதப்பிரிவு**

வி.இந்துஷா-2ஏபி, க.கௌதமன்-2ஏபி,

**வணிகப்பிரிவு**

த.முகுந்தினி-3ஏ, ஜெ.கீர்த்தனா-3ஏ, ர.சுரபி-2ஏபி, க.அபிநயன்-ஏபிசி, ரா.கபிலன்-ஏ2பி

**கலைப்பிரிவு**

ச.ஜனனி-2ஏபி, ௪.கயல்விழி-ஏ2பி.

### யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

**3A**

**உயிரியல் பிரிவு(தமிழ் மொழி மூலம்)**

ஆ.அபிசாகர், க.சிந்துயன். ப. செராம், ஶ்ரீ. ஜினோத், சு.டிலக்ஷன், சி. ஜனகராஜ், வ. சிவாகர்.

**உயிரியல் பிரிவு(ஆங்கில மொழிமூலம்)**

ஆ. அபிஷேன், சி. சஜீவன், ச.சகானன், பா.சயத்தன், சு.திவானன், இ.கவிஷன், த. அபினேஸ், நி.அபினேஸ், ந.கேசவன், ரா.ஹர்சன், ஸ். ஜனுஸ் ஜக்ஷன், தி.விஷ்ணவன், நா.திலோத்தமன், ந.அரவிந்தன், ஜ°.அன்னேசரன், கு.கீர்த்தனன்.

**கணிதப்பிரிவு(தமிழ் மொழி மூலம்)**

யோ. சஞ்யுதன், சு. ஹரிப்பிரசாத், அ.அபூர்வநாதா, க.அபிஷன், பூ. கோபிதன், ஜெ. இந்துயன், ம.யாழன் ஶ்ரீ.ஹரிவிஷ்னு, சி.செல்வகஜன், வ.சந்தோஷ், ச.றோபிகன், நா.மதீஷன், ச.கணேசவேல். ஜெ.டினுசன், கு.அருணோதயன், பு.கோபிசன், ச.சாஜீசன். ரா.மாதவன், தி.சங்கரநாதன்.

**கணிதப்பிரிவு (ஆங்கில மொழிமூலம்)**

ப.ஆதித்தியன், சோ.பதுமன், ம.விபிசன், வி.கௌரிதாசன். க.மதுஷன், வ.மிருரஞ்சன், சி.அக்சரான். ரா.யகீசன், பா.டனுஜன்.

**கலைப்பிரிவு**

கு. ஐங்கரன், யோ.பத்மப்பிரியன், ஐ.தவேதன், பா.ஐங்கரன், கி. கஜீபன்.

**2AS'**

**உயிரியல் பிரிவு(தமிழ் மொழி மூலம்)**

ச.ஜனார்த்தனன், து.பிரசாந்தன், ச.அதீசன், சி.தர்சனன், உ.அபிஷன், ர.பிரியதர்ஷன்

**உயிரியல் பிரிவு(ஆங்கில மொழிமூலம்)**

ஶ்ரீ. துவாகரன், ஆ. அபிலாஸ், ச.பேருஜன், ச.கவின்

**கணிதப்பிரிவு(தமிழ் மொழிமூலம்)**

ச.பிரசாந், வ.பிருந்தன், சி.பிரணவன், ச.அபிசாந், லோ.அபிராம், க.லகீசன், ந.நிருசாந், சு.வோவிஹாசன், ந.ஆதித்தியன், நி.அபிஷன். ர.ரிக்சிகன்,

**கணிதப்பிரிவு (ஆங்கில மொழிமூலம்)**

த.ஶ்ரீராம், அ.றேஸ்கரிஸ், கி.அனுசாகர், ஶ்ரீ.மாதவன்.

**உயிரியல் தொழில்நுட்பப்பிரிவு**

க. ஜெனிஸ்ரலன்

தி.கிரசாந், கு.பகுஷான்ராஜ்

**வணிகப்பிரிவு**

உ.ஆகாஷ். ர.சஞ்சயன்.

**A2B**

**பொறியியல் தொழில்நுட்பப்பிரிவு**

சி.சிலோஜன், கு.திவானுஜன், ரா.ஜனகன்

**உயிரியல் பிரிவு**

செ.கேசிகன், சா.கலியுகன், ச.தீபிகன், ஞ.கரிஷன், வி.பரத்வாசன், ஜெ.சேயோன் டினிசியஸ்

**உயிரியல் தொழில்நுட்பப்பிரிவு**

ஶ்ரீ.விதுஷன்

**கணிதப் பிரிவு**

கு.பரந்தாமசர்மா, ஞ.தர்சிகன், சு.நரேந்திரன், த.குசாநாந், த.சங்கீதன், ம.கோபிசாந், ச.றகுமாரன், கி.பிரணவன், க.வித்யாசாகர், ச.சசிவர்ணசர்மா, சு.கைலையன், ரா.மஹீபன், ம.சுபார்த்தியன்

**கலைப்பிரிவு**

க.ஹபிநயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரற்ற காலநிலையால் நோய்கள் பரவும் அபாயம்

## அறிகுறிகள் தென்பட்டால் அவதானம்

(கொழும்பு)

நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக பல்வேறு நோய்கள் பரவக்கூடிய அபாயம் காணப்படுவதாக சுகாதார அமைச்சு எச்சரித்துள்ளது. இதன் காரணமாக வயிற்றுப்போக்கு, தடிமல், வைரஸ் காய்ச்சல்கள் உள்ளிட்ட நோய்கள் பரவக் கூடிய அபாயம் காணப்படுவதாகச் சிறுவர் நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்த நோய்களானது அசுத்தமான நீர் மற்றும் உணவுகளைப் பயன்படுத்துவதன் மூலம் இலகுவாகப் பரவக்கூடும்.

காய்ச்சல், வாந்திபேதி, வயிற்றுப்போக்கு, வயிற்று வலி மற்றும் இரத்தம் கசிதல் உள்ளிட்டவை இந் நோய்களுக்கான அறிகுறிகளாகும்.

இந்நிலையில், குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் காய்ச்சல் விரைவாகப் பரவினால் அது வைரஸ் காய்ச்சலாகவும் இருக்கலாம்.

குளிர் காரணமாகக் குழந்தைகள் மத்தியில் காய்ச்சல் பரவக் கூடிய அபாயம் காணப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மேலும் இது போன்ற அறிகுறிகள் தென்பட்டால் வைத்தியசாலையை நாடுமாறும் கோரிக்கை விடுத்துள்ளார். (நி)


லங்கா மஹால் (PVT) LTD

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

(1083)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :

0091956615671 9

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எமமிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.

077 839 3974




### மார்க்கண்டு சுவாமிகளின் 40 ஆவது குருபூசை இன்று(05.06.2024)

# தன்னை அறிந்த மௌனமுனி

## மார்க்கண்டு சுவாமிகளிடம் யாம் பெற்ற ஆத்ம அனுபவங்கள்

சிவயோக சுவாமிகளின் சீடரும் அடியேனது குருதேவருமாகிய சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் 1982ஆம் ஆண்டு 72 அடியவர்கள் சகிதம் அமெரிக்காவில் இருந்து இலங்கைக்கு ஒரு திருத்தல யாத்திரை வந்திருந்தார். குருதேவரும் அடியவர்களும் அளவெட்டியில் ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரமத்தில் தங்கியிருந்தனர். அப்போது அடியேனுக்கு வயது பத்தொன்பது. ஒரு நாள் காலை குருதேவரும் அடியவர்களும் மார்க்கண்டு சுவாமிகளைத் தரிசிக்க செல்வதற்காக ஆயத்தமாகிக் கொண்டிருந்தனர். அன்றுவரை அடியேன் மார்க்கண்டு சுவாமிகள் என்ற பெயரைக்கூட கேள்விப்பட்டு இருக்கவில்லை. அவர்களுடன் நானும் கைதடியில் உள்ள ஆச்சிரமத்திற்குச் சென்றேன். அங்கு ஒரு சிறுகுடிசை போன்ற ஆச்சிரமம் நான்கு பக்கமும் வேலி அடைக்கப்பட்டு ஒரு சிறு படலையுடன் காட்சியளித்தது. முதலில் குருதேவர் படலையைத் திறந்து கொண்டு உள்ளே சென்று தானே கால்களை கழுவிக்கொண்டு ஆச்சிரமத்திற்குள் நுழைந்தார்.

அவரைப் பின் தொடர்ந்து நாங்கள் எல்லோரும் சென்றோம். அங்கு நின்று கொண்டிருந்த மார்க்கண்டு சுவாமிக்ளின் பாதங்களில் எனது குருதேவர் வீழ்ந்து வணங்கினார். எனக்கு அது மிகவும் ஆச்சரியமாகவிருந்தது. குருதேவரின் பாத தரிசனத்திற்காக மேலைத்தேய அடியவர்கள் பலமணிநேரம் காத்துநிற்பார்கள். அப்பேற்பட்ட குருதேவரே ஒருவரை வீழ்ந்து வணங்குகிறார் என்றால் அப்பெரியாரின் ஆன்ம முதிர்ச்சி எப்படி இருக்கும் என்பதை நான் வியந்தேன். அவரைத் தொடர்ந்து நாங்கள் எல்லோரும் சுவாமிகளை வணங்கினோம். அந்த முதல் சந்திப்பிலேயே மார்க்கண்டு சுவாமிகளின் ஆன்மீக முதிர்ச்சி எனது மனதில் ஆழமாகப் பதிந்துவிட்டது. தரிசனத்தை முடித்துக்கொண்டு திரும்புகையில் குருதேவர் பயணித்த அதே வாகனத்தில் நானும் பயணித்தேன். அப்பொழுது குருதேவர் என்னிடம் மார்க்கண்டு சுவாமியை பற்றி உனக்குத் தெரியுமா என்று கேட்டார். அதற்கு நான் இதுதான் எனக்கு முதற் தரிசனம். அவரை நான் அறிந்திருக்கவில்லை என்று கூறினேன் அப்போது எம்மோடு இருந்த கலாநிதி சண்முகசுந்தரம் என்ற அடியவரிடம் மார்க்கண்டு சுவாமிகளைப் பற்றி எனக்கு கூறும்படி கூறினார்.

மார்க்கண்டு சுவாமிகள் யாழ்ப்பாணத்திலுள்ள பிரான்பற்று கிராமத்தில் 1899 ஜனவரி மாதம் 29ஆம் திகதி பிறந்தார். தனது பாடசாலைக் கல்வியைத் தொடர்ந்து நில அளவைத் திணைக்களத்தில் பணியாற்றினார்.

இவர் இளமைப் பருவம் தொடக்கம் ஆன்மீகத்தில் நாட்டம் உடையவராகத் திகழ்ந்ததுடன், சிவயோக சுவாமிகள் மீது மிகுந்த பக்தியும் கொண்டிருந்தார். இவர் சிவயோக சுவாமிகளின் ஆணைப்படி தனது ஐம்பதாவது வயதில் வேலையிலிருந்து விலகி, ஏற்கனவே சிவயோக சுவாமிகளின் அடியவர் ஒருவரால் கைதடியில் அமைக்கப்பட்டிருந்த ஆச்சிரமத்தில் தங்க வைக்கப்பட்டார். மார்க்கண்டு சுவாமிகள் தன் எஞ்சிய காலத்தை அச்சிறு ஆச்சிரமத்திலே வாழ்ந்தார்.

சிவயோக சுவாமிகள் இடையிடையே கைதடி ஆச்சிரமத்திற்குச் சென்று மார்க்கண்டு சுவாமிகளது தவ வாழ்க்கையை நெறிப்படுத்தி வந்தார். சிவயோக சுவாமிகளது அருள் வாக்கியங்களான "தன்னைஅறி" (Know thy Self),"சும்மா இரு" (Be still or just be)என்ற ஆத்மசாதனையில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்.

சிவயோக சுவாமிகள் மகாசமாதியடைந்த பின்னர் அடியார் கூட்டம் மார்க்கண்டு சுவாமிகளின் கைதடி ஆச்சிரமத்திற்குச் செல்லத் தொடங்கியது. தன்னை நாடிவரும் அடியவர்களுக்கு மார்க்கண்டு சுவாமிகள், தனது குருநாதன் அருளிய நற்சிந்தனைப் பாடல்களையும் வாசகங்களையும் மட்டுமே கூறுவார். வேறு ஒன்றும் சொல்வதில்லை. தன்னை அறிந்த ஒரு ஞானியாகவும் சிவயோக சுவாமிகளின் துறவுச் சீடராகவும் கைதடி ஆச்சிரமத்திலிருந்து ஞான ஒளிபரப்பினார். செங்கலடி சிவதொண்டன் நிலையத்தில் சிவதொண்டு புரிந்து வந்த சந்த சுவாமிகள், (இலங்கையின் இறுதி தேசாதிபதியாக பணியாற்றிய சோல்பரிப் பிரபுவின் புதல்வர்) மார்க்கண்டு சுவாமிகளின் இறுதிக் காலத்தில் கைதடி ஆச்சிரமத்திற்கு வருகை தந்து, சுவாமிகளுடன் தங்கியிருந்து ஆத்மசாதனை செய்தார்.

எனது குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளின் அருள் ஆணைப்படி, 1982ஆம் ஆண்டு தொடக்கம் மார்க்கண்டு சுவாமிகள் சமாதியடையும் வரை ஒவ்வொரு வாரமும் சுவாமிகளைத் கைதடி ஆச்சிரமம் சென்று தரிசித்து வந்தேன்.

கிட்டத்தட்ட மூன்று வருடகாலம் வாரத்தில் ஒருநாள் சுவாமிகளைச் சென்று தரிசிப்பேன். ஆச்சிரமத்தில் நுழையும் பொழுது அவ்விடம் ஆத்மசக்தியுடன் நிசப்தமாக இருக்கும். சுவாமிகள் எந்நேரமும் ஆச்சிரம அறையின் உள்ளேயே இருப்பார். கதவுகள் சாத்தப்பட்டிருக்கும். வெளியிலே நாங்கள் கால்களைக் கழுவும் பொழுது சந்த சுவாமிகள் அல்லது சுவாமிகளைப் பராமரித்துவந்த விஸ்வலிங்கம் ஆசிரியர், முத்துக்குமாரசுவாமி ஆசிரியர், அல்லது அவர்களது குடும்பத்தில் ஒருவர் சுவாமியிடம் யார் வந்ததென அறிவிப்பர். அவர்களாகவே சுவாமிகளுக்கு ஒரு பாயும் வந்தவர்களுக்கு ஒரு பாயும் எதிர் எதிரே போட்டுவைப்பார்கள். சுவாமிகள் உள்ளிருந்து வரும்போதே ஒரு கற்பூரத்தட்டினை கற்பூரம் எரிந்த வண்ணம் கொண்டு வருவார். பின் உள்ளே சென்று விபூதியையும் கொண்டு வந்து வைப்பார். நாங்கள் ஏதாவது பழம், கற்கண்டு, கற்பூரம் கொண்டு போனால் அவற்றை வெளியே எடுத்து வைக்கும்படி கூறுவார். சுவாமிகள் பாயில் அமர்ந்த வண்ணம் தனது குருநாதர் அருளிய நற்சிந்தனைப் பாடல்களை உச்சரித்தவண்ணம் இருப்பார்.

நாங்கள் கொண்டு போன கற்பூரம் எரிந்து முடியும் மட்டும் நற்சிந்தனைப் பாராயணம் உச்சரித்துக் கொண்டிருப்பார். பாடி முடிந்ததும் நாங்கள் அவரை வணங்கி விபூதி பிரசாதம் பெறுவோம். அங்கு வரும் அடியவர்கள் அனைவருக்கும் தேநீர் வழங்குவது வழக்கம். நாங்கள் தேநீர் அருந்தும் போது சுவாமிகள் முன்னே இருந்து எங்களைப் பார்த்துக் கொண்டிருப்பார். சில தருணங்களில் தேநீர் அருந்துவதற்கு நேரம் எடுத்தால் 'சுடுகிறதா? ஆறுதலாய் குடியுங்கள்' என்று கூறுவார். ஆனால் தேநீர் குடித்தவுடன் எங்களை போய் வாருங்கள் என்று கூறுவார். நூற்றுக்கு மேலான தடவைகள் அங்கு யான் சென்று தரிசித்து இருந்தாலும் ஒரு நாள் கூட உனது பெயர் என்ன? எங்கிருந்து வருகிறாய் என எதுவும் கேட்டதில்லை. பற்றற்று தன்னை அறிந்த ஆன்மநிலையில் தன்னை நாடிவரும் அடியவர்களுக்கு தனது குருநாதரின் போதனைகளை சொல்லுவதே தனது வாழ்வின் ஆத்ம சாதனையாக கொண்டிருந்தார். சுவாமிகள் எந்நேரமும் மேலான சிவானந்தப் பெருநிலையில் திளைத்திருப்பார். ஒவ்வொரு தடவையும் யான் செல்லும்போது ஒரே மாதிரியான நிகழ்வுகள் நடந்தாலும் ஆன்மீகம் எனும் சிகரத்தில் ஏறுவதற்கு ஒவ்வொரு தரிசனமும் படிக்கட்டுகளாக இருந்தன.

ஆச்சிரமத்திற்கு செல்லும் வேளைகளில் சந்த சுவாமிகள் ஏதாவது செய்து கொண்டிருப்பார். எமது வருகையை மார்க்கண்டு சுவாமிகளுக்கு அறிவித்து விட்டு சென்று விடுவார். அவர் ஒருவருடனும் பேசுவதில்லை. ஒரு நாள் வழமைபோல அடியேன் மார்க்கண்டு சுவாமிகளை தரிசிக்க சென்றிருந்த வேளை அப்போது அங்கே நின்ற சந்த சுவாமிகள் என்னை நோக்கி வந்தார். அது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. என்னிடம் நீ ஆங்கிலம் பேசுவாயா என்று கேட்டார். ஆம் என்று பதில் அளித்தேன். அப்பொழுது ஆங்கிலத்தில் மார்க்கண்டு சுவாமிகள் சில தினங்களுக்கு முன்னர் விழுந்து விட்டார் என்றும் இனி அவர் அடியவர்களைப் பார்க்கமாட்டார். நீங்கள் கொண்டுவந்த காணிக்கையை அங்கே வைத்துவிட்டு தியானம் செய்து விட்டுச் செல்லும்படி கூறினார். நானும் கொண்டு சென்ற பழங்களை கதவின் அருகே வைத்து வணங்கிவிட்டு திரும்பிச் சென்றேன்.

அப்பொழுது 'நில்' என்று சுவாமிகளின் குரல் கேட்டது. திரும்பிப் பார்க்கும் போது மார்க்கண்டு சுவாமிகள் கதவைச் சற்று திறந்த வண்ணம் இரண்டு கதவுகளையும் பிடித்துக் கொண்டு நின்றார்.அடியேன் அவர் பாதங்களில் வீழ்ந்து வணங்கினேன். அங்கு நின்ற சந்த சுவாமிகளிடம் விபூதி கொண்டு வரும்படி பணித்தார். அடியேனுக்கு மார்க்கண்டு சுவாமிகள் விபூதி தந்து விட்டு, அப்படியே கதவைச் சாத்தி கட்டிலில் அமர்ந்தார். சந்த சுவாமிகள் என்னை அமரும்படி கூறிவிட்டு சிறிதுநேரத்தில் தேநீர் கொண்டு வந்தார். அத்தருணம் சந்த சுவாமிகள் என்னுடன் உரையாடினார்.அவர் கூறிய ஒரு விடயம் என் மனதில் ஆழமாகப் பதிந்தது. 'நீ அதிஷ்டசாலி, நீதான் கடைசியாக சுவாமிகளிடம் ஆசீர்வாதம் பெறுகிறாய்' என்று கூறினார். இச்சம்பவம் நடந்து சில காலத்தின் பின்னர் சுவாமிகள் சமாதியடைந்த செய்தி கேட்டு கைதடி ஆச்சிரமத்திற்கு விரைந்து சென்றேன்.

சுவாமிகளை பல தடவைகள் சந்தித்து ஆசிர்வாதம் பெற்றதோடு, சுவாமிகளின் மகா சமாதி கிரியைகளில் கலந்து கொண்டமை என் வாழ்நாளில் கிடைத்த பெரும்பேறு.

மார்க்கண்டு சுவாமிகள் 1984ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் திகதி கார்த்திகை நட்சத்திரத்தில் மகாசமாதியடைந்தார்.

ஈழத்து சித்தர் மரபில் வந்த சிவயோக சுவாமிகளின் சீடராகிய குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளிடம் தீட்சை பெற்ற அடியேனது ஆன்மீக வாழ்க்கை தொடருவதற்கு மார்க்கண்டு சுவாமிகளின் ஒவ்வொரு தரிசனமும் தன்னை அறியும் ஆத்மசாதனைக்கு உரமாக அமைந்தது.

**ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# இந்திய மக்களவை தேர்தல்-

# பா.ஜ.க கூட்டணி முன்னிலை

**(டில்லி)**
**இந்திய மக்களவைத் தேர்தலில் பதிவான எண்ணப்பட்டு வரும் நிலையில் நேற்று வரைய நிலவரப்படி பா.ஜ.க முன்னிலை வகிக்கிறது. 12 தொ மட்டுமே முடிவுகள் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்**



சூரத் மக்களவைத் தேர்தலில் ஏற்கெனவே போட்டியின்றி பா.ஜ.க வேட்பாளர் தேர்வு செய்யப்பட்ட நிலையில், தற்போது மொத்தம் பா.ஜ.க 5, காங்கிரஸ் 4, மதசார்பற்ற ஜனதா தளம் இரண்டு, ஆம் ஆத்மி ஒரு தொகுதியில் வெற்றி பெற்றதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

மேலும், பாஜக கூட்டணி 295, இந்தியா கூட்டணி 231 மக்களவைத் தொகுதிகளில் முன்னிலை பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பா.ஜ.க குஜராத் சூரத், கர்நாடக சித்ரதுர்கா, மத்திய பிரதேசம் திகாம்கர், இந்தூர், ராஜஸ்தானின் ஜெய்ப்பூர் தொகுதிகளில் வெற்றி பெற்றதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

காங்கிரஸ் கர்நாடக குல்பர்கா, மேகாலயா துரா, பஞ்சாப் ஜலந்தர், ஃபதேகர் சாஹிப் ஆகிய தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளது.

கர்நாடக மாண்டியா, கோலாரில் மதசார்பற்ற ஜனதா தளமும், பஞ்சாப் சங்ரூரில் ஆம் ஆத்மியும் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## தமிழகத்தில் அனைத்து இடங்களையும் கைப்பற்றியது தி.மு.க.கூட்டணி



(சென்னை)
தமிழகத்தில் தி.மு.க. கூட்டணி 39 இடங்களைக் கைப் பற்றி முன்னிலையிலுள்ள நிலையில், தூத்துக்குடியில் தி.மு.க. வேட்பாளர் கனிமொழி தொடர்ந்து முன்னிலை வகித்து வருகிறார்.

தமிழ்நாட்டில் 39 தொகுதிகள் மற்றும் புதுச்சேரியில் ஒரு தொகு

## 200 ஆண்டு கால வரலாற்றில் மெக்சிகோவில் முதல் பெண் ஜனாதிபதி

(மெக்சிக்கோ)
மெக்சிகோவில், முதல் பெண் ஜனாதிபதியாக கிளாடியா ஷீன்பாம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மெக்சிகோவில் நேற்று முன்தினம் ஜனாதிபதி, 128 செனட் உறுப்பினர்கள் மற்றும் 500 கீழவை உறுப்பினர்களுக்கான தேர்தல் நடைபெற்றது.

இதில் இடதுசாரி கட்சியான மொரேனா கட்சி சார்பில், 61 வயதான கிளாடியா ஷீன்பாம் போட்டியிட்டார்.

இவர், குறித்த தேர்தலில் 58.3 முதல் 60.7 சதவீத வாக்குகளை பெற்றுள்ளதாக, அந் நாட்டின் தேசிய தேர்தல் அமைப்பு தெரிவித்துள்ளது.




அத்துடன் கிளாடியா ஷீன்பாம், டிசம்பர் மாதம் ஜனாதிபதியாக பொறுப்பேற்பார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மெக்சிகோவில் நகர மேயராக பணியாற்றிய கிளாடியா ஷீன்பாம், காலநிலை விஞ்ஞானியாகவும், மெக்சிகோ தேச அரசியலில் அனுபவம் கொண்டவராகவும் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

மெக்சிகோவில், 200 ஆண்டுகால தேர்தல் வரலாற்றில் முதல் பெண் ஜனாதிபதி இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி)

## சீனாவை உளவு பார்க்கும் பிரித்தானியா?



(லண்டன்)
சீனாவின் மத்திய அரசாங்கத்தில் பணிபுரியும் தம்பதியொன்று பிரித்தானியாவைச் சேர்ந்த M16 என்ற உளவு அமைப்பிற்கு உளவு பார்த்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இது குறித்து சீனாவின் உளவு அமைப்பொன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் " பிரித்தானியாவைச் சேர்ந்த 'MI6' என்ற உளவுச் சேவையொன்று சீனாவின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் உளவு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமை அம்பலமாகியுள்ளது. எவ்வாறு இருப்பினும் எங்களது உளவுப் பிரிவானது பிரித்தானியாவின் குறித்த உளவு நடவடிக்கையை முறியடித்துள்ளது" இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த சில தினங்களுக்கு முன்னரும் பிரித்தானியா M16 உளவு அமைப்பானது சீனாவில் உள்ள வெளிநாட்டவரைப் பயன்படுத்தி உளவு நடவடிக்கையில் ஈடுபட்டதாக சீனாவின் உளவுப் பிரிவினர் குற்றம் சுமத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-2024

லயில்!

ன வாக்குகள்
யான மாலை
தொகுதிகளில்
கப்பட்டுள்ளன.

தியென 40 தொகுதிகளில் கடந்த ஏப்ரல் 19ஆம் திகதி ஒரே கட்டமாகத் தேர்தல் நடைபெற்றது.

இத்தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் வெளியாகிவரும் நிலையில், தூத்துக்குடி மக்களவைத் தொகுதியில் 2,44,034 வாக்கு வித்தியாசத்தில் கனிமொழி முன்னிலையில் உள்ளார்.

அதன்படி, தமிழகத்தில் அனைத்து தொகுதிகளை தி.மு.க கைப்பற்றியுள்ளது.

அ.தி.மு.க. சார்பில் சிவசாமி வேலுமணி 67,522 வாக்குகளும், பா.ஜ.க. கூட்டணியில், தமிழ் மாநில காங்கிரஸ் விஜய சீலன் 47,094 வாக்குகளும் பெற்றுள்ளனர். (நி)

# மத்திய காசா மீது இஸ்ரேல் தாக்குதல்

## 11 பேர் உயிரிழப்பு



(ஜெருசலேம்)

இஸ்ரேல் காசா மீது நடத்தும் தாக்குதலை நிறுத்துவதற்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டு வருகிறார்.

குறிப்பாக ரஃபா மீது தாக்குதல் நடத்தக் கூடாது என்று வலியுறுத்தி வருகிறார்.

கடந்த வெள்ளிக்கிழமை பிணைக் கைதிகளை விடுவிக்க இஸ்ரேல் இராணுவம் மூன்று வடிவிலான போர் நிறுத்தத்தை முன்வைத்துள்ளதாக ஜோ பைடன் தெரிவித்திருந்தார். மேலும், போரை நிறுத்துவதற்கான நேரம் இது. இஸ்ரேல் மீது மிகப்பெரிய அளவில் தாக்குதல் நடத்துவதற்கான திறன் ஹமாஸிடம் இல்லை எனவும் தெரிவித்திருந்தார். இதனால் போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு ஹமாஸ் முன்வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் கடந்த ஞாயிறு நள்ளிரவும் மற்றும் திங்கட்கிழமை காலையில் மத்திய காசா மீது இஸ்ரேல் வான் தாக்குதல் நடத்தியதாகவும், இதில் பெண் ஒருவர், மூன்று குழந்தைகள் உட்பட 11 பேர் உயிரிழந்ததாக பாலஸ்தீன சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சனிக்கிழமை நள்ளிரவு புரைஜி முகாம் அருகில் உள்ள வீடு மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் மூன்று குழந்தைகள் உட்பட 4 பேர் உயிரிழந்தனர்.

நுசெய்ரத் முகாமில் நடத்தப்பட்ட தாக்குதலில் பெண் உட்பட ஏழு பேர் உயிரிழந்தனர் எனத் தெரிவித்துள்ளது.

இதற்கிடையே ஹமாஸ் கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 7 ஆம் திகதி கடத்திசெல்லப்பட்டதாக கருதப்படும் பிணைக்கைதிகளில் ஒருவரின் உடல் கண்டெடுக்கப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

காசாவில் மக்கள் தொகை அடர்த்தியாக உள்ள ரஃபா நகரின் தெற்குப் பகுதியில் இஸ்ரேல் இராணுவம் தாக்குதலை அதிகரித்து வருகிறது.

இஸ்ரேல் தாக்குதலில் பாலஸ்தீன மக்கள் உணவு, மருத்துவ வசதி கிடைக்காமல் தவித்து வருகின்றனர்.

காசா மீது நடத்தப்படும் தாக்குதலில் இதுவரை 36 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 7ஆம் திகதி ஹமாஸ் இஸ்ரேல் மீது நடத்திய தாக்குதலில் 1200 பேர் உயிரிழந்தனர். 250 பேரை ஹமாஸ் பிணைக் கைதிகளாக பிடித்துச் சென்றது. (நி)

# டிக் டொக்கில் இணைந்த ட்ரம்ப் 30 லட்சம் பேர் பின் தொடர்வு

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் குடியரசு கட்சி தலைவரான இவர் இந்த ஆண்டு நடைபெறும் தேர்தலிலும் அங்கு ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கி உள்ளார். இதனை முன்னிட்டு நாடு முழுவதும் தீவிர தேர்தல் பிரசாரத்தில் அவர் ஈடுபட்டு வருகிறார்.

இதற்கிடையே கடந்த வாரம் ஆபாச நடிகை ஸ்டார்மி டேனியல்சுக்கு பணம் கொடுத்த விவகாரத்தில் அவர் குற்றவாளி என கோர்ட்டு தீர்ப்பளித்துள்ளது. இந்தநிலையில் சீன செயலியான டிக் டொக்கில் ட்ரம்ப் புதிய கணக்கு துவங்கினார். அவரை டிக் டொக்கில் 30 லட்சத்துக்கும் அதிகமானோர் பின்தொடர்கின்றனர். இவர் ஜனாதிபதியாக இருந்தபோது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளது என கூறி டிக் டொக் செயலிக்கு தடை விதிக்க பல்வேறு முயற்சிகளை எடுத்தார்.



இந்தநிலையில் தற்போது அவரே டிக் டொக்கில் இணைந்துள்ளது விமர்சனத்தை ஏற்படுத்தி உள்ளது. அவர் தேர்தல் பிரசார உத்திக்காக டிக் டொக்கில் இணைந்திருப்பதாக அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர். (நி)

# அனைத்து நாடுகளும்

## பாலஸ்தீனத்தை அங்கீகரிக்க வேண்டும்

## ஐ.நா நிபுணர்கள் வேண்டுகோள்

(ஜெனீவா)

அனைத்து நாடுகளும் பாஸ்தீனத்தை அங்கீகரிக்க வேண்டும் என ஐக்கிய நாடுகளின் நிபுணர்கள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஐக்கிய நாடுகளின் 146 நாடுகளை பின்பற்றி ஏனைய நாடுகளும் பாலஸ்தீனத்தை அங்கீகரிக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள ஐக்கிய நாடுகளின் நிபுணர்கள் காஸாவில் உடனடி யுத்த நிறுத்தத்தை கொண்டு



வருவதற்காக நாடுகள் தங்கள் அரசியல் இராஜதந்திர வளங்களை பயன்படுத்த வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பாலஸ்தீனத்தை அங்கீகரிப்பது என்பது பாலஸ்தீன மக்களின் உரிமைகளை அவர்களின் போராட்டங்களை சுதந்திரம், விடுதலைக்கான அவர்களின் துயரங்களை அங்கீகரிப்பதாகும்.

பாலஸ்தீனத்திலும் மத்திய கிழக்கிலும் நிரந்தர சமாதானத்தை உருவாக்குவதற்கான முன்நிபந்தனை இதுவென ஐ.நா நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜீன் 5- உலக சுற்றாடல்தினம்: நிலத்திற்கும் எதிர்காலத்திற்குமான அறைகூவல்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை,

எங்கள் நிலம் எங்கள் எதிர் காலம். நாங்கள் பாது காக்கும் சந்ததி [Our land. Our Future. We are # Generation Restoration] என்னும் மகுட வாசகத்தைக் கொண்டு "நிலப்பாதுகாப்பு, பாலைவனமாதலை தடுத்தல் மற்றும் வரட்சியின் மீள் தன்மை" [Land declaration desertification and drought resilient] என்னும் கருப்பொருளையும் தாங்கி உலகளவில் இன்றையதினம் கொண்டாடப்படுகின்றது. ஐக்கிய நாடுகள் தாபனத்தின் சுற்றாடல் பாதுகாப்பு நிறுவனம் இதனை 1973 இலிருந்து கொண்டாடிவருகின்றது.

உலகத்தில் 40 சதவீதமான பயிர்ச்செய்கை நிலப்பகுதி வளமற்றதாகி விட்டது. வளமற்று பூமியும் வரண்டதால் உலகளவில் 3.2 பில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். உலகளவில் வருடமொன்றுக்கு 7 மில்லியன் மக்கள் மாசுற்றகாற்றை சுவாசிப்பதால் இறக்கின்றனர். இதில் 6,50,000 குழந்தைகள் என்றால் பாருங்கள். சுற்றாடலை பாதுகாக்கின்ற வருடாந்த நிகழ்வாக உலகளவில் கொண்டாடப்படுகின்ற இத்தினத்தில் எமது பங்களிப்பும் அவசியம் உள்ளார்ந்திருக்க வேண்டும். இது தனிமனித இயக்கமல்ல. அனைவரும் இணைந்து பங்களித்



தாலே எமது சுற்றாடலை நாம் எமக்காக இனிவரும் சந்ததிக்காக பேணிப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

எமது தேசம் எமது நிலம், எமது சுற்றாடல் என்னும் பொறுப்புணர்வு அனைவருக்குள்ளும் இருத்தல் வேண்டும். சுற்றாடல் இயற்கை மயமாக பசுமையாக இருக்க மரங்களை இன்னும் திட்டமிட்டு நடுகை செய்யலாம். எமது மனை அமைந்திருக்கும் சுற்றாடலில் ஆரம்பித்து பின்னர் எமது கிராமம் நகரம் என அனைத்திலும் மக்கள் அனைவரும் பங்களிப்பதன் மூலம் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் இன்னும் உற்பத்தித்திறன் பெற்றதாகவும் மாற்றிக்கொள்ளலாம்.

இதற்கு உதாரணங்கள் பற்பல. எமது உணவை நாம் உற்பத்தி செய்து பூர்த்தி செய்தல் அவசியம். அனைத்து வளங்களும் கொண்ட இந்த நாட்டில் வளங்களை முறையாக எதிர்கால சந்ததிக்கும் விட்டு வைத்து அவற்றை வினைத்திறனாக பயன்படுத்தும் தொழினுட்பங்களை இன்னும் கவனத்தில் கொள்ளலாம். எமக்குள்ள உயிரினங்கள், விலங்குகள், தாவரங்கள் என அனைத்தையும் பாதுகாப்பது மிகவும் முக்கியமானதாகும். கற்றறிந்த சமூகமாக அனைவரினதும் தேவைகளை உணர்ந்தவர்களாக அனைவரும் வாழக்கூடிய சுற்றாடலை வளப்படுத்திக் கொடுப்பது மிகவும் அவசியமானதாகும்.

நமது நாட்டின் மூனறில் இரண்டு பகுதி வரண்ட பிரதேசமாகும். எமது பகுதி வரண்டு போகும் காலங்களில் வரட்சியில் தக்கவைக்கும் விவசாய செய்கையை மேற் கொள்ளலாம். நிலப்பாதுகாப்பு மிகவும் அவசியமானதாகும். விவசாய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி நிலத்தை பாதுகாக்கும் அதேநேரத்தில் சூழலை வளமுள்ளதாக மாற்றியமைக்கும் வழிவகைகளையும் முன்னெடுக்கலாம். பயிர்ச்செய்கை போகங்கள் மாற்றமடைந்துவிட்ட இக்காலத்தில் நிகழ்காலத்துக்கான பயிர்ச்செய்கை முறைகளை தேர்ந்தெடுத்து பயன்படுத்தல் அவசியம்.

நீர்வளம் மிகவும் முக்கியமானது. சுற்றாடல் பாதுகாப்பில் குடிநீர், ஏனைய தேவைகளுக்கான நீர் மற்றும் விவசாயச் செய்கைக்கான நீரின் தேவை உறுதிசெய்யப்படல் வேண்டும். நாட்டின் வரண்ட பிரதேசம் என்னும் நிலைப்பாடு கால நிலையின் மாறுதலால் தானாகவே மாற்றமடையும் காலத்தில் வாழுகின்ற நாம் சமகாலத்தின் நிகழ்வுகளுக்கு ஈடுகொடுத்து வாழப் பழகிக் கொள்ளுதல் நல்லது. எமது வாழ்க்கை முறைகளை மாற்றியமைத்து காலநிலையின் மாறுதலுடன் எமது வாழ்க்கையை அமைத்துக் கொள்வதே சிறந்ததாகும். இப்பூமியில் உள்ள அனைத்து உயிரினங்களும் தக்கெனப் பிழைக்கும் முறைகளுக்குள் தம்மை உள்ளார்ந்து பின்பற்றும் போது நாமும் அதற்கேற்றால் போல் எமக் குள்ளும் மாற்றங்களை கொண்டு வருதல் வேண்டும்.

அபரிவிதமான விஞ்ஞான வளர்ச்சிக்குள் முழுவீச்சில் நமது தேசம் புதுமைகளைத் தேடியோடிக்கொண்டிருக்கின்றது. சுற்றாடல் பற்றிய கொள்கைகள் எழுத்துக்களில் மட்டும் ஆவணங்களாக இருக்கின்றனவே தவிர அவற்றை முழுமையாக நடைமுறைப்படுத்தியதில்லை. திட்டம் தீட்டி அதற்கான நடைமுறைகளை ஆராய்ந்து நிதி ஒதுக்கீடுகளை செய்து ஆரம்பிக்கும் நிலையிலேயே பல திட்டங்கள் நடைமுறை சாத்தியமற்று முழுமை பெறாததால் அதனது விளைவை மக்கள் பெறமுடியாது போய் விடு கின்றது. சுற்றாடல் பாதுகாப்[illegible] முழுமை பெறாத திட்டங்களாக ஆண் டாண்டு காலமாக மீளப் புதுப்பிக்கும் நிலையிலேயே தொடர்ந்து செல்கின்றது. இறக்குமதி பொருளாதார நாடாகவே எம்மை தக்கவைத்துக் கொண்டிருக்கின்றோம். பல வருடங்களுக்கு முன்னர் எம்மை விட பின்தங்கிய நிலையிலிருந்த நாடுகள் பல தம்மை வளப்படுத்தி தமது அந்நிய செலாவாணியை உயர்த்தியதால் முன்நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றன. நாட்டின் பொருளாதாரம் உச்ச நிலைக்கு வரும் போது ஆக்கபூர்வமான அபிவிருத்தியும் அதனால் மக்களுக்கான வளங்களும் பல்கிப் பெருகிவிடும். எமது நாடு இந்த நிலைப்பாட்டில் எதிர் மறையிலேயே இருந்து கொண்டு இன்னமும் பொருளாதாரத்தை தக்கவைக்க பெரும் பாடுபடுகின்றது.

எமது நிலம் வளமிளந்து விவசாயத்தில் விளைச்சலின்றி மாறிக் கொண்டிருக்கின்றது. வளமான மண்ணைக் கொண்டதாக மாற்றியமைக்க வேண்டியதன் பொறுப்பு எமக்கானது.

வரண்ட பூமியில் விவசாயஞ் செய்யும் காலத்தில் தற்போது கால நிலையும் பெருமளவில் மாறி கால போகம் சிறு போகம் என்னும் கள நிலைமையை முழுமையாக மாற்றியமைத்துள்ளன. கால நிலைமாற்றம் சுற்றாடலின் பாதுகாப்பு கேள்விக் குறி யாக மாறியிருக்கின்றது. சூறா வளி, புயற் காற்று, வெள்ளப் பெருக்கு, மண்சரிவு இன்னும் இன்னோரன்ன இயற்கைப் பேரிடர்கள் சுற்றாடலின் புனிதத்தை மாற்றியமைத்து விடுகின்றன. இவற்றுடன் சேதனக்கழிவுகள் மற்றும் அசேதன உக்க முடியாத கழிவுகளும் சுற்றாடாலில் பாதிப்பை ஏற்படுத்தி விடுகி ன்றன.

நகரப் பகுதிகளில் சேரும் சேதனக் கழிவுகள் அனைத்தும் வளமான சேதன உரமாக மாற்றுவதற்கான பல வகை தொழில்னுட்பங்கள் இருக்கின்ற இந்நிலையிலும் இன்னும் அவை கழிவுகளாக கொட்டி நிரப்பப்படுவதும் அதனால் சுற்றாடலுக்கு பலவித தீங்குகளும் ஏற்பட்டு விடுகின்றன. எமது சுற்றாடலை நாமனைவரும் இணைந்து பாதுகாக்கும் செயற்பாடுகளுக்காக கிராமந் தோறும் நகரந் தோறும் இளை யவர்கள் அணியை உருவாக்கி அவர்களுக்கும் அந்தந்த பிரதேச அபிவிருத்தியுடன் அவர்களை இணைத்துக் கொள்ளலாம்.

## இன்று ஒரு தகவல் 145



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## தாயின் பெருமை

"அன்னையும் பிதாவும் முன் அறி தெய்வம்" இதை விளக்குவதற்கு எத்தனையோ பேர் எவ்வளவு கதைகளை கூறியிருக்கிறார்கள். அந்தக் காலத்திலே வியாசர் அவருடைய மகன் சுகருக்கு ஒரு கதை சொன்னாராம். நரசிம்ம புராணத்திலே அது வருகிறது. அதை ஒரு பெரியவர் சொல்லியிருக்கிறார். அந்தக் கதையை நான் இப்போது உங்களுக்கு கூறுகின்றேன்.

கோசல தேசத்தில் யக்ஞ சர்மா என்று ஒருவர் இருந்தார். அவருடைய பிள்ளை தேவசர்மா. இந்த தேவசர்மா குருகுலம் எல்லாம் முடித்து விட்டு வீட்டிற்குப் போனார். அந்த சமயத்தில் அவருடைய அப்பா காலமாகிவிட்டார். உடனே இவர் மிகவும் விரக்தியடைந்துவிட்டார். ஊரை விட்டு இன்னொரு ஊரில் போய் தங்கி விட்டார்.

தினமும் காலையில் தியானம் செய்வதும் பிச்சை வாங்கி சாப்பிடுவதும். இப்படியே ஓடிக்கொண்டிருந்தது காலம். ஒரு நாள் காலையிலே ஆற்றிற்குப் போய்க் குளித்தார். வேட்டியைத் துவைத்து கரையிலே காயப்போட்டார். அந்த சமயம் பார்த்து ஒரு காகமும், ஒரு கொக்கும் அந்தப் பக்கமாக வந்தது. வேட்டியைப் பார்த்ததும் தூக்கிக் கொண்டு சென்று விட்டன. தேவசர்மா அதைப் பார்த்து விட்டார். மிகவும் கோபமாக அந்தப் பறவைகளைப் பார்த்தார். அவ்வளவு தான் அது இரண்டும் அப்படியே எரிந்து சாம்பலாகி விட்டது. அவ்வளவு வலிமை அவருக்கு உண்டு.

அப்பேற்பட்ட தேவசர்மா அடுத்த நாள் சாவித்திரி என்ற ஒரு பதிவிரதை வீட்டிற்கு பிச்சை வாங்குவதற்காக வந்தார். இவர் வந்து வாசலில் நின்று கொண்டேயிருந்தார். அந்த அம்மா வெகு நேரமாக இவரைக் கவனிக்கவேயில்லை. அவருடைய வீட்டுக்காரருக்கு பணிவிடைகள் செய்து கொண்டு இருந்தார். அதை எல்லாம் முடித்து விட்டு இவருக்கு பிச்சை போடுவதற்காக வெளியே வந்தார்.

இவர் உடனே அந்த அம்மாவை கோபமாக முறைத்துப் பார்த்தார். ஆற்றங்கரையிலே காக்காவையும் கொக்கையும் முறைத்துப் பார்த்தாரே அது மாதிரி! "என்னை அங்கே அந்தப் பறவைகளை எரித்தது போல் என்னையும் எரித்து விடலாம் என்று பார்க்கிறாயா?" என்று கேட்டார் அந்த அம்மா. இவருக்கு தூக்கி வாரிப்போட்டது. ஆற்றங்கரையிலே நடந்தது உங்களுக்கு எப்படித் தெரியும்? என்று கேட்டார். அதற்கு அந்த அம்மா "என் கணவருக்கு சேவை செய்வது தான் என்னுடைய ஒரே தர்மம். அதனால் எங்கே என்ன நடந்தாலும் எனக்குத் தெரியும்" என்றார்.

வேதசர்மா மலைத்துப் போய் நின்றார். அதற்குப்பின் அந்த அம்மா இவருக்கு புத்திமதி சொல்ல ஆரம்பித்தார். இதோ பாருங்கள் உன்னுடைய தகப்பனார் இறந்த பின் உடனே நீ ஊரை விட்டு இங்கே ஓடி வந்து விட்டாய் அங்கே உன்னுடைய தாய் தனியாக இருக்கிறார்களே அவர்களை யார் கவனிக்கிறது? அநாதையாக இருக்கின்ற அந்த விதவைத் தாயாரை காப்பாற்றுவதை விட்டுவிட்டு இங்கே வந்து இப்படி பிச்சை எடுத்து வயிற்றை வளர்த்துக் கொண்டிருக்கிறாயே உனக்கு வெட்கமாக இல்லையா? பத்து மாதம் சுமந்தவரை பரிதவிக்க விட்டு வந்திருக்கிறாயே என்ன நியாயம்? நீ இப்போது செய்து கொண்டிருக்கின்ற தியானம் தவம் எதற்கும் பயன் இல்லை.

எவனுடைய தாயார் கஷ்டத்தில் இருக்கிறார்களோ அவனுடைய வாழ்க்கை வீண். எவன் ஒருவன் தன்னுடைய தாயாரைக் காப்பாற்றுகின்றானோ, தாயார் சொற்படி கேட்டு நடக்கின்றானே அவன் செய்யும் எல்லாக் கருமங்களும் இவ்லோகத்திலும் சரி பரலோ கத்திலும் சரி நல்லதையே செய்யும். அதனால் நீ உடனே உனது ஊருக்கு திரும்பச் செல். உன்னுடைய தாயாரைக் காப்பாற்று" என்று புத்திமதி சொன்னார் அந்த அம்மா. தேவசர்மா உடனடியாக ஊருக்குத் திரும்பிப் போனார். தாயாரைக் காப்பாற்றினார். அதற்குப் பின் அவருக்கு எல்லாம் நல்லதாகவே நடந்ததாம்.

இது தான் அந்தக் கதை. இந்தக் கதையை இக்காலத்து சிறுவன் ஒருவனிடம் சொன்னேன். சொல்லி முடித்து விட்டு நீயும் உன்னுடைய அம்மாவையும் அப்பாவையும் காப்பாற்ற வேண்டும் என்று சொன்னேன். அதற்கு அவன், "நான் நிச்சயமாக என்னுடைய அம்மாவையும் அப்பாவையும் காப்பாற்றுவேன் ஆனால் அப்படி அவர்களை காப்பாற்றுவதிலே ஒரு சிறிய வித்தியாசம் உண்டு" என்றான். என்னடா அது? என்று கேட்டேன். "நான் அம்மாவை நேரடியாகக் காப்பாற்றுவேன். அப்பாவை அம்மாவிடம் இருந்து காப்பாற்றுவேன்" என்றான். விபரம் தெரிந்த சிறுவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மனித புதைகுழியை பார்வையிட்டார் ஐ.நா பிரதிநிதி



(மன்னார்)

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் என்ட்ரோ பிரஞ்ச் நேற்று செவ்வாய்க்கிழமை மன்னாருக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்ட நிலையில் பல்வேறு சந்திப்புக்களை முன்னெடுத்தார்.

மதியம் மன்னார் மனித உரிமைக்கும் அபிவிருத்திக்குமான நிலையத்தில் விசேட சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது. இதன் போது மன்னார் மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கத் தலைவி மனுவல் உதயச்சந்திரா மற்றும் காணாமல்ஆக்கப்பட்டவர்களின் உறவுகளையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

மேலும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களான சட்டத்தரணி வி.எஸ்.நிறைஞ்சன் மற்றும் ரனித்தா ஞானராஜ் ஆகியோரையும் சந்தித்து மன்னார் மாவட்டத்தின் மனித உரிமைகள் நிலைப்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடினார்.

அதனைத் தொடர்ந்து மன்னார் நகர பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட சதொச மனித புதைகுழியையும் அவர் நேரடியாக சென்று பார்வையிட்டார்.

இதன் போது ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி உள்ளிட்ட குழுவினருடன் மன்னார் மனித உரிமைக்கும் அபிவிருத்திக்குமான நிலைய பிரதிநிதிகள், மன்னார் மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா, மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களான சட்டத்தரணி வி.எஸ்.நிறைஞ்சன் மற்றும் ரனித்தா ஞானராஜ் ஆகியோரும் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-285)

## சுற்றாடல் வாரத்தினை முன்னிட்டு

# பனை ஓலை பைகள் வழங்கி வைப்பு



(வவுனியா)

உலக சுற்றுச்சூழல் பாதுகாப்பு தினம் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் 5ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

உலக சுற்றுச்சூழல் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு நாட்டின் பல பாகங்களிலும் சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வு வேலைத்திட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

அந்தவகையில் சுற்றாடல் வாரத்தினை முன்னிட்டு பிளாஸ்ரிக், பொலித்தீன் பாவனைகளைக் குறைத்து "ஆரோக்கியமான சூழல்" ஒன்றை உருவாக்கும் பொருட்டு விழிப்புணர்வு நிகழ்வு நேற்று பொதுச் சந்தையில் நடைபெற்றது.

இதன்போது பொலித்தீனுக்கு மாற்றாக கடதாசிப் பைகள் துணிப்பைகள் பனையோலைப் பைகள் என்பன பயன்படுத்துவதன் அவசியம் குறித்து விழிப்புணர்வூட்டப்பட்டது.

மேலும், பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பைகளைப் பாவிப்பதற்குப் பதிலாக பனை ஓலையால் செய்யப்பட்ட பைகளைப் பாவிப்பதற்கு பொதுமக்களை ஊக்கப்படுத்தும் வகையில் ஓலைப்பைகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர், சிரேஷ்ட பொதுச் சுகாதார பரிசோதகர், பனை அபிவிருத்திச் சபை போதனாசிரியர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை உத்தியோகத்தர்கள், பச்சிலைப் பள்ளி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (நி-315)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை மற்றும் PIZZA HUT நிறுவனமும் இணைந்து காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் விரைவு சேவை உணவகம் கற்கை நெறியினை எதிர்வரும் 10 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது.

இக்கற்கை நெறி முற்றிலும் இலவசமானது.

மேலதிக விபரங்களிற்கு 021 222 7949, 0212211793, 071 031 8737, 077 020 3280 என்ற தொலை பேசி இலக்கங்களுக்கு தொடர்பினை ஏற்படுத்துமாறு. இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் பிரதிப்பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (நி)

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது2024 ஆம் ஆண்டு இரண்டாம் அரையாண்டிற்கான முழுநேர கற்கைகள் எதிர்வரும் ஜூலை மாதம் 1 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

இக்கற்கை நெறிகள் கிளிநொச்சி, கண்டாவளை, பழைய கச்சேரி, பளை, பூநகரி தொழிற்பயிற்சி நிலையங்களில் நடைபெறவுள்ளன.

தகவல் தொடர்பாடல் தொழி நுட்ப வியலாளர், மின்னினைப்பாளர், கணனி வன்பொருள் திருத்துநர், கணனி படவடிவமைப்பாளர், கட்டட நிர்மாண உதவியாளர், பெண்கள் சிறு வர்களுக்கான ஆடை வடிவமைப்பாளர், சிகையலங்கரிப்பாளர், அழகுக்கலை வல்லுநர், படவரைஞர், நீர்க்குழாய் பொருத்துநர், வெளியிணைப்பு படகு இயந்திர திருத்துநர், போன்ற கற்கை நெறிகளிற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கற்க விரும்புவோர் தங்கள் பதிவுகளை நாளை மறு தினம் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் மாவட்ட அலுவலகம் 155 ஆம் கட்டை கிளிநொச்சி அல்லது அனைத்து தொழிற்பயிற்சி நிலையங்களிலும் மேற்கொள்ள முடியும்.

மேலதிக விபரங்களினை பெற்றுக் கொள்வதற்கு 021 228 5686, 071 031 8737, 077 613 9307 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும் என இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் பிரதிப்பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (நி)

# வவுனிக்குளத்திற்கு புதிய நீர்ப்பாசன பொறியியலாளர்

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசன குளமான வவுனிக்குளத்தின் நீர்ப்பாசனப் பொறியியலாளராக எந்திரி. ச.சர்வராஜா நேற்று முன்தினம் கடமைகளைப் பொறுப்பேற்றார்.

கடந்த காலங்களில் இவர் யாழ்ப்பாண நீர்ப்பாசன பொறியியலாளராக கடமை ஆற்றியுள்ளதுடன் வவுனியா பிராந்திய மற்றும் வடமாகாண பணிப்பாளர் அலுவலக நீர்ப்பாசன பொறியியலாளராகவும் கடமை ஆற்றியுள்ளார்.

மேலும் இதுவரை காலமும் வவுனிக்குளத்தின் நீர்பாசன பொறியியலாளராக கடமையாற்றிய எந்திரி.கை.பிரகாஷ் கிளிநொச்சி கிழக்கு பிரிவிற்கு இடமாற்றலாகி சென்றுள்ளார். (நி-350)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: O/L,கனடா<br>எதிர்பார்ப்பு:படித்த குணமுள்ள பெண்<br>தொ.இ: B/14578 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 31<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/14345 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா-23 1/2 உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:AAT,Auditor(pvt)<br>எதிர்பார்ப்பு: சாதாரண உத்தியோகம்<br>தொ.இ: B/14580 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>உயரம்: 1 1/2<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண், விவாகரத்தானவர்<br>தொ.இ: G/14350 |
| பிறப்பு:1990 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா:16 உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: CIMA, Assistant manager(pvt)<br>எதிர்பார்ப்பு: IT, Accountant, Doctor Engineer<br>தொ.இ: B/14581 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BA, pvt<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு, அரசதொழில், விவாகரத்தானவர்<br>தொ.இ: G/14366 |
| பிறப்பு:1994-இந்து<br>நட்சத்திரம் :விசாகம்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: A/L, Ceylingo Insurance<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம் செய்யும் பெண்<br>தொ.இ: B/14584 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா:63<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: சித்த மருத்துவம்<br>எதிர்பார்ப் பு: அரச/தனியார் தொழில், சைவபோசனம்<br>தொ.இ: G/14370 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 499





"மதுராந்தகத் தேவரை அந்தரங்கமாக அழைத்துப் போக வேண்டிய அவசியம் இப்போது இல்லை. மேலும் சில சமயம் இளையராணியையும் உடன் அழைத்துப் போனால்தானே மறுபடி அவசியம் நேரும் போது மதுராந்தகரை அழைத்துப் போக அந்தப் பல்லக்கு வாகனம் உபயோகமாயிருக்கும்?" இவ்வாறு நந்தினி கூறியதைப் பழுவேட்டரையர் உற்சாகமாக ஒப்புக் கொண்டார்.

காமாந்தகாரத்தில் மூழ்கியிருந்த அக்கிழவருக்குத் தம்முடன் அந்தப் புவனசுந்தரியை அழைத்துப் போவதில் ஆர்வம் இருப்பது இயல்புதானே?

சுழிக்காற்றுக்கு முன்னால் அவர்கள் நாகைப்பட்டினத்துக்கு வந்திருந்தார்கள். அங்கே தனாதிகாரி தமது உத்தியோகக் கடமைகளை முதலில் நிறைவேற்றினார்.

நாகைப்பட்டினம் அப்போது தமிழகத்தின் முக்கியத் துறைமுகப்பட்டினங்களில் ஒன்றாயிருந்தது. வெளிநாடுகளிலிருந்து எத்தனை எத்தனையோ பொருள்கள் பெரிய பெரிய மரக்கலங்களில் வந்து அத்துறைமுகத்தில் இறங்கிக் கொண்டிருந்தன. அப்பொருள்களை ஆயிரக்கணக்கான சிறிய படகுகள் ஏற்றிக் கொண்டு வந்து கரையில் சேர்த்தன. கரையிலிருந்து மாற்றுப் பண்டங்களை ஏற்றிக்கொண்டு போய் மரக்கலங்களில் சேர்த்தன.

இவற்றுக்கெல்லாம் சுங்கத் திறை விதித்து வசூலிக்கும் அதிகாரிகள் பலர் இருந்தனர். அவர்கள் சரிவர வேலை செய்கிறார்களா என்பதை மேற்பார்வை பார்ப்பது சோழ நாட்டுத் தனாதிகாரி பெரிய பழுவேட்டரையரின் உரிமையும், கடமையும் அல்லவா?

அந்த வேலை பூர்த்தியான பிறகு பெரிய பழுவேட்டரையர் நாகைப்பட்டினத்தில் புகழ் பெற்றிருந்த சூடாமணி புத்த விஹாரைக்கும் விஜயம் செய்தார். பிக்குக்கள் அவரைத் தக்கபடி வரவேற்று உபசரித்தனர். புத்தவிஹாரைக்குத் தேவை ஏதேனும் உண்டா, பிக்குகளுக்குக் குறைகள் ஏதேனும் உண்டா என்று தனாதிகாரி விசாரித்தார். ஒன்றும் இல்லையென்று பிக்குகள் கூறி, சுந்தர சோழ மன்னருக்குத் தங்கள் நன்றியையும் தெரிவித்தார்கள்.

சில நாளைக்கு முன் இந்த விஹாரையைச் சேர்ந்த பிக்குகள் இருவர் தஞ்சைக்குச் சக்கரவர்த்தியைப் பார்க்க வந்திருந்தார்கள். புத்த சங்கத்தின் சார்பாகச் சுந்தர சோழர் விரைவில் நோய் நீங்கிக் குணம் அடையவேண்டும் என்ற வாழ்த்துக்களைத் தெரிவித்தார்கள். அப்போது அவர்கள் இளவரசர் அருள்மொழிவர்மர் இலங்கையில் புத்த தர்மத்துக்குச் செய்து வரும் தொண்டுகளைக் குறித்துத் தங்கள் பாராட்டுதலைத் தெரிவித்தார்கள். இடிந்து போன புத்த விஹாரைகளைப் புதுப்பித்துக் கொடுக்கும்படியாக இளவரசர் கட்டளையிட்டு நிறைவேற்றியும் வருவது இலங்கையில் உள்ள புத்த பிக்குகளின் மகா சங்கத்துக்கு அளவற்ற மகிழ்ச்சியை அளித்து வருவதாகவும் அவர்கள் கூறினார்கள். "சக்கரவர்த்திப் பெருமானே! இன்னும் ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியும் நாங்கள் கேள்விப்படுகிறோம். இலங்கையின் பழமையான சிம்மாசனத்தைத் தங்களுடைய இளைய திருக்குமாரருக்கே அளித்து இலங்கை அரசராக முடி சூட்டி விடலாம் என்று பிக்குகளில் ஒரு பெரும் பகுதியார் கருதுகிறார்களாம்! அவ்விதம் தங்களுக்குள் பேசிக்கொண்டிருக்கிறார்களாம்! இதைக் காட்டிலும் நம் இளவரசரின் பெருமைக்கு வேறு என்ன சான்று வேண்டும்!" என்றார்கள்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த பெரிய பழுவேட்டரையரின் உள்ளத்தில் ஓர் அபூர்வமான யோசனை உதயமாயிற்று. பிக்குகள் சென்ற பிறகு அதைச் சுந்தர சோழச் சக்கரவர்த்தியிடமும் தெரிவித்தார்.

"மூன்று உலகும் ஆளும் இறைவா! தங்கள் அதிகாரம் எட்டுத் திசையிலும் பரவி நிலைபெற்றிருக்கிறது.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## முட்டாளை மணந்த இளவரசி



(நேற்றைய தொடர்ச்சி...)

நன்கு அவமானப் படப் போகிறான். அவனை இங்கு அனுப்பி வையுங்கள், என்றாள் கோபத்துடன் அவள்.

பிச்சைக்காரன் உள்ளே நுழைந்தான். இளவரசியைப் பணிவாக வணங்கினான். பனிக்கட்டியை விட குளிர்ந்த கைகளை உடைய இளவரசியாரே வணக்கம், என்றான் அவன்.

என் கைகள் குளிர்ச்சியாக இல்லை. சூடாக உள்ளது. இந்தச் சூட்டில் ஒரு கோழியே வறுபட்டு விடும். இது உனக்குத் தெரியுமா? என்று வெடுக்கெனப் பதில் தந்தாள் அவள்.

அப்படியா? கோழி வறுபடுமா என்று பார்க்கிறேன், என்று அவன் சாக்குப்பைக்குள் கையை விட்டான். செத்த கோழியை வெளியே எடுத்தான்.

எதிர்பாராதது நடந்ததைக் கண்ட அவள் திகைத்தாள், தன் திகைப்பை மறைத்து கொண்டு சூடு பட்டால் கோழியின் கொழுப்பு ஒழுகுமே, என்றாள்.

பைக்குள் கைவிட்டுத் தொட்டியை எடுத்தான் அவன் ஒழுகுவதை இதற்குள் பிடித்துக் கொள்ளலாம், என்றான்.

தொட்டி விரிசல் [illegible] என்றாள் அவள்.

குதிரைக் குளம்பை எடுத்த அவன், விரிசல் உள்ள பகுதியில் கீழே இதை வைத்து அடைத்து விடலாம், என்றான்.

எப்படி எதிர்க் கேள்வி கேட்டாலும் பதில் வைத்திருக்கிறானே என்று நினைத்தாள் அவள். தொட்டியை விட குளம்பு பெரிதாக இருக்கிறது. எப்படித் தொட்டியை அதனால் நெருக்க முடியும்? என்று கேட்டாள் அவள்.

தடியை வெளியே எடுத்தான் அவன். இதைப் பயன்படுத்திக் குளம்பிற்குள் தொட்டியை இறுக்கமாகப் பொருத்த முடியும் என்றான் அவன்.

ஏறுமாறான கேள்விகளுக்குத் தக்க பதில் தருகிறானே. அவன் கை ஓங்கி வருகிறதே, என்று திகைத்தாள் அவள். அவனை மடக்க நினைத்த அவள், இளைஞனே! நான் என்ன சொன்னாலும் அதை வேறொன்றாகத் திருப்பி விடுகிறாய். நாக்கு பல திருப்பங்கள் இருப்பது போல நீ நடந்து கொள்கிறாய், என்றாள் அவள்.

தன் பைக்குள் கையை விட்ட அவன் ஆட்டுக் கொம்பை எடுத்தான். அதை அவளிடம் காட்டி, இதைவிட அதிக திருகுகள் உள்ளதைப் பார்த்திருக்கிறீர்களா? என்று கேட்டான்.

அவள் என்ன பதில் சொல்வது என்று சிந்தித்தாள். நீண்ட நேரம் ஆயிற்று. அவளுக்கு ஒன்றும் தோன்ற வில்லை. பிறகென்ன, இளவரசிக்கும் அவனுக்கும் சீரும் சிறப்புமாகத் திருமணம் நடந்தது.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல செயல் எப்போதும் உலகில் தனக்கு ஓர் இடம் உண்டாக்கிக்கொள்ளும். – *எமர்சன்.*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மகளிர் பாடசாலைக்கான தேவையை உணருங்கள்

2023ஆம் ஆண்டின் க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வடமாகாணத்தில் உச்சம் தொட்டுள்ளன.

இதற்குப் பாடசாலைகளின் அர்ப்பணிப்பும் தனியார் கல்வி நிறுவனங்களின் விடாமுயற்சியும் புலம்பெயர் உறவுகள் பாடசாலைகளுக்கு வழங்குகின்ற வளங்களும் காத்திரமான பங்கை ஆற்றியுள்ளன.

இதற்கு மேலாக, எமது மாணவர்களின் கல்வி வீழ்ச்சி தொடர்பில் நம் கல்வியாளர்களும் இனப் பற்றாளர்களும் கல்வி நிர்வாகங்களும் மேற்கொண்ட பிரசாரங்களும் விழிப்புணர்வுகளும் தம் பிள்ளைகளைப் படிப்பிக்க வேண்டும் என்ற எம் பெற்றோர்களின் அதீத அக்கறையும் சேர்ந்து மாணவர்கள் உயர்ந்த பெறுபேற்றை அடைவதற்கு வழிவகுத்துள்ளன.

இவையெல்லாவற்றுக்கும் மேலாக, எங்கள் மாணவச் செல்வங்களின் விடாமுயற்சியும் கல்விக்கான அவர்களின் தியாகமும் அவர்களை உச்சம் தொட வைத்தது.

இதற்காக நாம் அனைவரும் பெருமையடைய முடியும் என்பதுடன் இவ்விடயம் ஒருபுறமிருக்க, வட மாகாணத்தில் பெண் பிள்ளைகள் கற்பதற்கான பாடசாலைகளின் தேவை ஏற்பட்டுள்ளதை நம் வட மாகாணக் கல்வி நிர்வாகம் அறிந்து கொள்ள வேண்டும்.

அதாவது சமகாலத்தில் பெண் பிள்ளைகளுக்கான பாடசாலைகளில் தம் பெண் பிள்ளைகள் படிக்க வேண்டுமென நம் பெற்றோர்கள் விரும்புகின்றனர்.

அவர்களின் விருப்பத்தில் நியாயமும் உண்டு. இருந்தும் நம் மத்தியில், தனித்து பெண் பிள்ளைகளுக்கான பாடசாலைகள் போதுமானதாக இல்லை என்பதையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

உதாரணத்துக்கு யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் தரம் ஆறிலும் உயர்தரத்திலும் சேர்வதற்காக விண்ணப்பிக்கின்ற மாணவிகளின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளது.

எனினும் அனுமதிக்கான வரையறைகள் இருப்பதன் காரணமாக மாணவிகள் பலரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுகின்றன.

இதனால் சம்பந்தப்பட்ட மாணவிகளின் பெற்றோர்கள் மிகுந்த வேதனை கொண்டுள்ளனர்.

எனவே யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியை விஸ்தரிக்க வேண்டிய தேவைப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதற்காக யாழ்ப்பாணம் கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாசாலையை யாழ்.இந்து மகளிர் கல்லூரியாக மாற்றி அந்தப் பாடசாலையின் வளத்தையும் பயன்படுத்தி இந்து மகளிர் கல்லூரியில் கற்கின்ற மாணவிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும்.

நல்லூர் நாவலர் பெருமானால் ஸ்தாபிக்கப்பட்ட கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலை, யாழ்.இந்து மகளிர் கல்லூரியாக மாறி அங்கு நிறைந்த பிள்ளைகள் கற்பதற்கு வழிவகுப்பது, தொடர்ந்தும் நம் மாணவர்களின் கல்விப் பெறுபேறுகள் உயர்வடைவதற்கு வழிவகுக்கும்.

# யாழ். போதனாவை தேசிய வைத்தியசாலையாக மாற்றுவதற்கு ஆளணிகள் தேவையாகவுள்ளது

### யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி

யாழ். போதனா வைத்தியசாலையினை தேசிய வைத்தியசாலையாக மாற்றுவதற்கு வெற்றிடத்திற்கான ஆளணிகள் தேவையாகயுள்ளதாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் 04 வது தேசிய வைத்தியசாலையாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தரமுயர்த்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டிருந்தபோதிலும் அதன் தேவைகள் நிலைப்பாடு பற்றி சுகாதார அமைச்சிடம் அறிவித்திருக்கின்றோம்.

1350 படுக்கைகளுடனான விடுதியும் 325 வைத்தியர்களும், 680 தாதியர்களுமாக மொத்தமாக 2,150 நபர்கள்கடமை புரிந்து வருகின்றனர்.

தேசிய வைத்தியசாலையாக்குவதற்கு 200 மேலதிக தாதியர்கள் ஆளணியும், 100 வைத்தியர்கள் ஆளணியும் தேவையாகவுள்ளது.

இவ்வாறு அதிகரிப்பு செய்யப்படும் போது தேசிய வைத்தியசாலையாக மாற்ற சந்தர்ப்பம் காணப்படுகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன்யாழ். போதனா வைத்தியசாலையில் 320 வைத்திய நிபுணர்கள் சேவையாற்றி வருகின்றனர். வைத்திய வெற்றிடங்கள் அனேகமாக நிரப்பட்டுள்ளது. மேலும் சில நிபுணர்களும் பற்றாக்குறையாகக்காணப்படுகின்றது.

சிறப்புபிரிவுகளுக்குகுறைந்தது நூறு வைத்தியர்கள் தேவையாகவுள்ளது. இருதய சிகிச்சைப் பிரிவு, இருதய சத்திரச் சிகிச்சைப்பிரிவு போன்ற வைத்திய துறைக்கு பற்றாக்குறை காணப்படுகின்றது. அதற்கான ஆளணிபற்றாக்குறையினை நிவர்த்தி செய்ய சுகாதார அமைச்சு முழுமையான பங்களிப்பினை வழங்கவேண்டும் எனவும் தெரிவித்தார். (ம-7,10)

# வவுனியாவில் வீட்டிற்குள் நுழைந்த பொலிஸாரின் ஜீப் வண்டி

### மயிரிழையில் தப்பிய மாணவர்கள்

(வவுனியா)

வவுனியா, நெடுங்கேணி பகுதியில் சாரதியின் கட்டுப்பாட்டையிழந்த புளியங்குளம் பொலிஸாரின்ஜீப்வண்டிவீடு ஒன்றுக்குள்புகுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

நெடுங்கேணி - புளியங்குளம் வீதியில் நேற்று மாலை பயணித்த புளியங்குளம் பொலிஸ் நிலைய ஜீப் வண்டி சாரதியின் கட்டுப்பாட்டையிழந்து வீதியோரத்தில் இருந்த வீடு ஒன்றுக்குள் புகுந்துள்ளது.

வீடு வேலியை உடைத்துக் கொண்டு சென்ற ஜீப் வண்டி வீட்டிற்குள் நின்ற மோட்டர் சைக்கிள், வீதியோர மின்சாரத்தூண், வீடு குடிநீர் இணைப்பு என்பவற்றைசேதப்படுத்தியுள்ளதுடன், அருகில் உள்ள கொட்டகையில் படித்துக் கொண்டிருந்த சுமார் 40 வரையான மாணவர்கள் மயிரிழையில்தப்பியுள்ளனர்.

விபத்தின் போது புளியங்குளம்பொலிஸ்நிலையபொறுப்பதிகாரி உட்பட 5 பேர் சிவில் உடையில் வாகனத்தில் இருந்ததாக விபத்து இடம்பெற்ற பகுதியில்இருந்த மக்கள் தெரிவித்தனர். (ம-7,10,250)

# யாழில் கைதான போலி வைத்தியர் பல மோசடிகளுடன் தொடர்புடையவர்

### விளக்க மறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவு

வெளிநாடுகளில் வசிப்பவர்களை இலக்கு வைத்து பல இலட்ச ரூபாய் மோசடிகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் யாழ்ப்பாணத்தில் கைதான போலி வைத்தியரை விளக்கமறியலில் வைக்குமாறு, யாழ். நீதவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

குறித்த நபர், பாடசாலை மாணவிகள்பலருடன்காதல் தொடர்புகளை பேணி வந்துள்ளமையுடன் வெளிநாடுகளில் வசிக்கும் தன்னை விட வயது அதிகமான பெண்களுடனும் காதல் தொடர்புகளை பேணி அவர்களை மிரட்டி பல இலட்ச ரூபாய்களை பெற்று வந்துள்ளார். அத்துடன் இளைஞனிடம் இருந்து மீட்கப்பட்ட தொலைபேசிகளில் பல பெண்களின் அந்தரங்கப் புகைப்படங்கள், காணொளிகள் உள்ளதாகவும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

யாழ்ப்பாணம் சுன்னாகம்பகுதியை சேர்ந்த இளைஞன் தன்னை வைத்தியர் என அறிமுகப்படுத்தி, அதற் [illegible] வெளிநாடுகளில் வசிக்கும் நபர்களை இலக்கு வைத்து பல இலட்ச ரூபாய் மோசடியில் ஈடுபட்டு வந்துள்ளார்.

இந்நிலையில் குறித்த இளைஞனை நேற்று முன்தினம் திங்கட்கிழமை யாழ்.நகர்ப் பகுதியில் அதிசொகுசு காரில் இளைஞன் பயணித்துக்கொண்டிருந்த வேளை பொலிஸாரினால் இடைமறிக்கப்பட்டு கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட வேளை இளைஞன் 15 பவுண் நகையை அணிந்திருந்ததுடன் , 5 இலட்ச ரூபாய் பணத்தினை செலவுக்கு என வைத்திருந்துள்ளார். அத்துடன் 05 அதி நவீன தொலைபேசிகள் , பல வங்கி அட்டைகள் என்பவற்றையும் பொலிஸார் மீட்டிருந்தனர்.

இளைஞனை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்த வேளை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பல போலி உறுதி முடிப்புக்கள் , காணி மோசடிகள் உள்ளிட்ட பல்வேறு சம்பவங்களுடன் தொடர்பு [illegible] தெரியவந்துள்ளது.

இளைஞன் தனித்து குறித்த மோசடிகளில் ஈடுபடவில்லை எனவும் , இவருக்கு பின்னால் பெரும் கும்பல் ஒன்று மோசடிக்கு உதவி புரிந்துள்ளமையும் தெரியவந்துள்ளது.

அதேவேளை இளைஞனின் வங்கி கணக்குகள் மற்றும் சொத்துக்களை ஆராய்ந்து , இளைஞன் யார் யாருடன் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் பணப்பரிமாற்றங்களில் ஈடுபட்டார் என்பது தொடர்பிலும் விசாரணைகளை முன்னெடுத்து , தொடர்புடைய நபர்களை விசாரணை வலயத்திற்குள் எடுத்து விசாரணை செய்ய பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்நிலையில் நேற்றைய தினம் கைது செய்யப்பட்ட இளைஞனை யாழ். நீதவான் நீதிமன்றில் முற்படுத்தியவேளை மன்று இளைஞனை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளது. (ம-7,10,33)

# பொலிஸாருக்கு இடையூறு விளைவித்த தாயார் கைது

(அம்பாறை)

வர்த்தகர்களுக்குப்போலி காசோலைகளை வழங்கியதாகக் கூறப்படும் பெண் ஒருவரைக் கைது செய்யச் சென்றபொலிஸாருக்கு இடையூறு விளைவித்த பெண்ணின் தாயார் கைது செய்யப்பட்டுள்ளதாக அம்பாறை பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் உத்தியோகத்தர்களின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்தல், சந்தேக நபருக்குத் தப்பிச் செல்ல உதவி செய்தல், பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களின் சீருடைகளை சேதப்படுத்தல் உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் தாயார் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பெண்ணை தேடிச் சென்ற பொலிஸார் தாயை கைது செய்தனர். கைதான பெண் அம்பாறை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ள நிலையில் ஒரு இலட்சம் ரூபா இரண்டு சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை இந்த சம்பவத்தின் போது சந்தேக நபரான பெண் தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது நினைவலைகளில் தியாகி பொன் சிவகுமாரன்

ஜூன் 5ஆம் திகதி, சயனைட் கலாசாரத்தை தமிழ்ப் போராளிகள் மத்தியில் விதைத்த தியாகி பொன் சிவகுமாரன் இறந்து 50 ஆண்டுகளாகின்றன. ஏற்கனவே கைது செய்யப்பட்டு பொலிஸாரின் சித்திரவதைகளுக்கு ஆளான அனுபவத்தைக் கொண்ட சிவகுமாரன், இன்னொரு சந்தர்ப்பத்தில் பொலிஸாரினால் தான் கைது செய்யப்படுவேனாகின் சயனைட் அருந்தி தன்னுயிரை மாய்த்துக் கொள்வேன் என பல தடவைகள் கூறியது இன்றும் என் நினைவலைகளிலிருந்து நீங்கமறுக்கிறது.

தனது கூற்றினை அவர் செயல் வடிவத்திலும் நிரூபித்துக்காட்டியவர். அவருடன் கூடிப்பழகியவர்களில் விரல் விட்டு எண்ணக்கூடியவர்கள் மட்டுமே இன்று அவரை நினைவு கூரக்கூடியவர்களாக இருக்கிறார்கள். அவரின் ஆரம்பகால செயற்பாடுகளிலிருந்து அவருடன் நெருங்கிப் பழகியவன் என்ற வகையில் அவர் தொடர்பான எனது அனுபவங்களை இக்கட்டுரை மூலம் பகிர்ந்து கொள்கின்றேன்.

தமிழர்களின் போராட்டவரலாற்றில் சிவகுமாரனைப் போல பல போராளிகளின் உயிர்த் தியாகங்கள், அர்ப்பணிப்புகளின் விளைவாக ஏற்படுத்தப்பட்டதே இலங்கை - இந்திய ஒப்பந்தமும், அதனடிப்படையில் உருவான 13 ஆவது அரசியலமைப்பு திருத்தமும், மாகாணசபை முறைமையுமாகும்.

இப்போராட்ட வரலாற்றுடன் எவ்வித தொடர்புகளும் அற்றவர்களும் இவ்வரலாற்று பின்னணி தெரியாதவர்களுமே இன்று மாகாண சபைகளின், குறிப்பாக வடக்கு மாகாண சபையின், நிறைவேற்று செயற்பாடுகளுக்கு பொறுப்பானவர்களாக இருந்து வருவதுடன் தமது சொந்த நலன்களை முன்னிறுத்தி அவர்கள் செயற்பட்டு வருவது வேதனைக்குரிய விடயமாகும்.

சிவகுமாரன் உரும்பிராயினைச் சேர்ந்த பொன்னத்துரை அன்னலட்சுமி தம்பதியினருக்கு நான்காவது புதல்வனாக 26.08.1950 ஆம் ஆண்டு பிறந்தார். சிறுவயதில் அவரை 'திரவியம்' எனசெல்லமாக அழைத்தனர். யாழ். இந்துக் கல்லூரியில் தனது படிப்பை முடித்துக்கொண்ட அவர், கொக்குவிலில் அமைந்துள்ள யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் கல்வி கற்ற 1970 ஆரம்ப காலப்பகுதியில் தான் அவருடனான நட்பு எனக்கு ஏற்பட்டது.

தொழில்நுட்பக் கல்லூரியில் படித்துக்கொண்டே கொக்குவில் கிழக்கில் முத்துக்குமாரசாமி என்பவரிடம் ஆங்கிலம் கற்பதற்காக வந்த போதே அவருடன் நெருக்கமான நட்பு ஆரம்பமானது. ஆயுதப் போராட்டத்தினூடாகவே எமது உரிமைகளை வென்றெடுக்க முடியும் என்று கூறுவதுடன் நின்றுவிடாமல் ரின்பால் தகரப்பேணியில் வெடிகுண்டு எவ்வாறு தயாரிப்பது என்பது தொடர்பாகவும் எமக்கு எடுத்துரைப்பார்.

அத்துடன் நின்றுவிடாமல் உரும்பிராயில் உள்ள தனது வீட்டிற்கு எம்மை அழைத்துச் சென்று ரின்பால் தகரப்பேணியில் வெடிகுண்டுதயாரிக்கும் முறையை செயல்வடிவிலும் காட்டினார். சிவகுமாரன் ஓர் ஆயுதப் போராளி மட்டுமல்ல, தனது இளம் வயதிலிருந்தே சமபந்தி போஜனத்தை நடத்தி இளைஞர்களிடையே எழுச்சியை உருவாக்கியவர். மரணவீடுகளில் பறைமேளம் அடிப்பதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்ற முயற்சியில் பறைமேளங்களை உரும்பிராய் சந்தியில் போட்டு உடைத்து எரித்தார். அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் கூர்மையடைந்திருந்த சாதி வேறுபாடுகளை களைய வேண்டும் என்பதில் ஜனநாயக வழியில் முனைப்பாக செயற்பட்டதுடன், அப்போதைய அரசினால் புத்தூர் போன்ற பிரதேசங்களில் ஏழ்மை நிலையிலிருந்தவர்களை அரசின் அனுசரணையுடன் பௌத்த மதமாற்றம் செய்யப்படுவதனை எதிர்த்து போராட்டங்களை முன்னெடுத்ததுடன் எம்மையும் அதில் இணைத்துக் கொண்டார்.

ஆசிரியர் முத்துக்குமாரசாமி ஆங்கிலம் கற்பிப்பது மட்டுமல்லாமல், அரசியல் போராட்ட வரலாறுகளையும் இடையிடையே எடுத்துரைப்பதுண்டு. அவரது வீட்டின் அண்டைய வீட்டில் அவரது தம்பியார் ஆனந்தகுமாரசாமி வசித்து வந்தார். அவர் அப்போதைய அரசியல் சூழ்நிலைகளில் ஆயுதப் போராட்டத்தின் மூலமே தீர்வினைப் பெறலாம் என்பதில் நம்பிக்கை கொண்டிருந்தார். அவர்களது வீட்டிற்கு அண்மையில் ஞானசுந்தரம் என்ற இளைப்பாறிய பொலிஸ்காரர் இருந்தார். அவர், வன்முறைப் பாதை வழியாகத் தான் தமிழர்களுக்கு தீர்வு கிடைக்கும் என்பதில் அதீத நம்பிக்கை கொண்டிருந்தது மட்டுமல்லாமல், இளைஞர்கள் மத்தியில் அதுதொடர்பாக தீவிர பிரச்சாரத்திலும் ஈடுபட்டிருந்தார். இந்த மூன்று வீடுகளிலும் தான் சிவகுமாரனுடன் நானும் அந்நேரத்தில் அதிக நேரங்களை செலவிட்டு வந்துள்ளோம்.

சிவகுமாரன் கந்தகம், பொட்டாசியம் போன்ற வெடிமருந்துகளை ஆனந்த குமாரசாமியின் வீட்டில் பதுக்கி வைத்திருந்தார். இவ்வாறு பதுக்கி வைக்கப்பட்டிருந்த வெடிமருந்துகளில் ஒரு பகுதியினை பாவித்து குண்டைத் தயாரித்து அந்நேரம் பிரதியமைச்சராக இருந்த சோம வீரசந்திரசிறி என்பவர் உரும்பிராயில் உள்ள பாடசாலையொன்றின் நிகழ்விற்கு வந்திருந்த வேளையில் அவரது காரின் சில்லின் பின்பக்கமாக வைத்துள்ளார். நிகழ்வு முடிவடைந்து பிரதியமைச்சரை ஏற்றுவதற்காக கார் புறப்படவிருந்த வேளையில் குண்டு வெடித்தது. இது அவரின் முதற் பரிசோதனை ஆதலினால் காருக்கு சிறிது சேதமேற்பட்டதேயொழிய வேறு சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை.

உரும்பிராயில் தீவிர அரசியல் போக்குள்ளவர் சிவகுமாரன் என்பது ஊரறிந்த விடயம். இதனால் இதனை யார் செய்திருப்பார் என்பதில் எவருக்கும் சந்தேகமில்லை. அதனடிப்படையில் பொலிஸார் சிவகுமாரனை கைது செய்தனர். சிவகுமாரன் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து நாமனைவரும் கைது செய்யப்படுவோம் என்பதனை உணர்ந்து கொண்டோம். அடுத்தநாள் இரவு முத்துக்குமாரசாமியின் வீட்டில் இது தொடர்பாக கூடி ஆராய்ந்து கொண்டிருந்த வேளையில் பெருமளவில் பொலிஸார் அவரது வீட்டுக்கு வந்தனர். பொலிஸாரின் வருகையை கண்ட நாமெல்லோரும் அவரின் வீட்டின் பின்பக்கமாக ஓடி தப்பித்துக்கொண்டோம். முத்துக்குமாரசாமி ஆசிரியர் மட்டும் தப்பியோட மறுத்து பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். அதனைத் தொடர்ந்து ஆனந்த குமாரசாமியை கைது செய்ய பொலிஸார் முனைந்தவேளை அவரும் வீட்டிலிருந்து தப்பிச்சென்றதால் அவரது அண்ணன் முத்துக்குமாரசாமியை கைது செய்தனர்.

சிலநாட்களாக தலைமறைவாக இருந்த ஆனந்தகுமாரசாமி சரணடைந்த பின்னரே அவரது அண்ணன் முத்துக்குமாரசாமி விடுவிக்கப்பட்டார். சிவகுமாரனும் ஆனந்த குமாரசாமியும் அனுராதபுர சிறையில் அடைக்கப்பட்டனர். அக்கால சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய இவ்வாறான குற்றச்சாட்டுகளுக்கு பிணை எடுப்பதானால் கொழும்பிலுள்ள மேல் நீதிமன்றத்திற்கே செல்ல வேண்டும். அத்துடன் மேல் நீதிமன்றத்தில் எல்லா சட்டத்தரணிகளும் வாதாட முடியாது. நானும் சிவகுமாரனின் தாயாரும் அமிர்தலிங்கத்திடம் சென்று சிவகுமாரனை பிணையில் எடுப்பதற்கு ஆவண செய்யும்படி வேண்டினோம். எங்கள் கோரிக்கையினை ஏற்றுக் கொண்ட அவர், கொழும்பில் வசிக்கும் இராணி சட்டத்தரணி திருச்செல்வம் அவர்களுக்கு ஓர் கடிதத்தினை கொடுத்து அவரைச் சென்று சந்திக்கும்படிகேட்டுக் கொண்டார்.

நானும் சிவகுமாரின் தாயாரும் மாளிகை போல இருந்த கொழும்பிலுள்ள அவரது வீட்டிற்கு சென்றிருந்தோம். அமிர்தலிங்கத்தின் கடிதத்தை படித்து விட்டு "எங்களைக் கேட்டா குண்டு வச்சீங்க" என்று ஏசினார். ஒருவாறு அவரைச் சமாளித்து சிவகுமாரனுக்காக ஆஜராக வைத்து பிணையில் விடுவிக்க வழிகோரினோம்.

அக் காலகட்டத்தில் சிறிமாவோ பண்டாரநாயக்க அரசினால் பல்கலைகழகத் தரப்படுத்தல் முறை அறிமுகமானது. தரப்படுத்தலிற்கு எதிர்ப்பு தெரிவிக்க வேண்டுமென முடிவுசெய்தோம். இது தொடர்பாக ஆர்வமுள்ள பலரை இணைத்து ஒரு ஆலோசனை கூட்டம் நடத்தினோம். மலாயன் கபேக்கு மேலிருந்த மண்டபத்தில் கூட்டம் நடந்தது. சத்தியசீலன், மாவை, லோரன்ஸ், மகா உத்தமன், அரியரட்ணம் (புன்னாலை கட்டுவன்), இலங்கை மன்னன், முத்து குமாரசுவாமி, சந்திரகுமார் (பிரான்ஸ்), சபாலிங்கம், பலநடராஜ ஐயர் எனப் பலர் கூட்டத்திற்கு வந்திருந்தது நினைவிலிருக்கிறது. மாணவர் பேரவையென செயற்படுவது, தரப்படுத்தலுக்கு எதிராகபோராட்டம் செய்வதென முடிவுசெய்தோம்.

இத்தரப்படுத்தலிற்கெதிரான போராட்டங்களில் சிவகுமாரனின் பங்களிப்பு அளப்பரியது. அதனைத் தொடர்ந்து ஆயுதப் போராட்டத்தினை சுமந்து சென்ற அமைப்பாக மாணவர் பேரவை அமைகின்றது. இது பிற்காலத்தில் பல ஆயுதக் குழுக்களின் வளர்ச்சிக்கு வித்திட்டதாய் அமைப்பாகவும் விளங்குகின்றது.

சிறீலங்கா சுதந்திரக் கட்சியினை யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்த அனுசரணையாகச் செயற்பட்ட யாழ் மேயர் அல்பிரட் துரையப்பாவினைக் கொலை செய்வதற்கு யாழ்.வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசலையின் முன்பு எடுத்த முயற்சி துரையப்பா காலதாமதமாக வந்ததால் அவரை உயிர் பிழைக்க வைத்தது. இக் கொலை முயற்சியைத் தொடர்ந்தும் சிவகுமாரன் யாழ் சிறையிலும், அனுராதபுரம் சிறையிலும் ஒன்றரை வருடங்களிற்கு மேலாகக் கைதியாக இருந்தார்.

1974 ஆம் ஆண்டு தை மாதத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மகாநாட்டின் இறுதி நாளன்று பொலிஸாரினால் நடாத்தப்பட்ட அடாவடித்தனத்தினை நேரில் பார்வையிட்ட சிவகுமாரன் அதற்குப் பொறுப்பானவர்களைப் பழிவாங்கியே தீருவேனென்று அன்றே சபதமெடுத்துக் கொண்டார். அவ் உள்ளக் கொதிப்பின் விளைவே தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டு அசம்பாவிதத்திற்குப் பொறுப்பதிகாரியாக இருந்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சந்திரசிறி மீது குண்டு வீச்சு நடாத்தி சுடமுற்பட்டமைக்குக் காரணமாகும்.

பொலிஸ் தேடுதல்களிலிருந்து ஒழிந்து வாழவேண்டிய நிலை மற்றும் தனது தீவிர செயற்பாடுகளுக்கு நிதி ஒரு தடையாக இருந்த சூழலில் பலரிடம் சென்று நிதியுதவி கேட்டும் எல்லோரும் கைவிரித்த நிலையிலேயே கோப்பாய் கிராமிய வங்கியில் பணத்தை கொள்ளையடிக்கும் முடிவிற்கு சிவகுமாரன் வந்தார். அதுவும் அவ் வங்கியில் வேலை செய்த ஊழியர் ஒருவரின் தகவல்களின் அடிப்படையில்தான் பணத்தைக் கொள்ளையிட திட்டமிட்டார். இருந்தும், அச்செயற்பாடு அவருக்கு



(தியாகி பொன் சிவகுமாரின் 50 ஆவது சிராத்த தினத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது)

காலனாக மாறிவிட்டது. அக் கொள்ளைச் சம்பவத்திற்கு முன்பே தன்னிடமிருந்த சயனைட்டினைப் பாணில் நனைத்துக் காகத்திற்குக் கொடுத்து ஒத்திகையையும் சிவகுமாரன் பார்த்திருக்கின்றார்.

வங்கியில் கொள்ளையிட முற்பட்ட போது உசாரடைந்த ஊழியர்களின் செயற்பாட்டினால் இவர்கள் வங்கியிலிருந்து ஓடிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்போது பொலிஸாரும் பின் தொடரவே தோட்டங்களிற்கூடாக ஓடிய சிவகுமாரன் காலில் மரவள்ளிக் கட்டை ஏறியதன் விளைவாகத் தொடர்ந்து ஓட முடியாமல் நின்ற சந்தர்ப்பத்தைப் பாவித்து பொலிஸார் அவரை நெருங்கினர்.

சிவகுமாரன் அப் பொலிஸாரின் தன்னியக்கத் துப்பாக்கியைப் பறித்து அவரைச் சுடமுயன்றிருக்கிறார். அப்போது அப் பொலிஸ் அதிகாரி தனக்கு மூன்று பெண் பிள்ளைகள் என்றும் அவர்களுடைய தாயாரும் இறந்து விட்டதாகவும் தானும் இறந்தால் அப்பிள்ளைகள் அநாதைகளாகி விடுவார்களென்று கெஞ்சியதன் அடிப்படையில் (சிவகுமாரன் அனுராதபுர சிறையிலிருந்த காலங்களில் சிங்களம் பேசுவதற்கு நன்கு கற்றுக் கொண்டவர்) சிவகுமாரன் அவரைச் சுடாது தன்னிடமிருந்த சயனைட்டை தானே அருந்தித் தன்னுயிரை மாய்த்துக் கொண்டார்.

சிவகுமாரன் வைத்தியசாலையில் இறந்த பின்பு அவரது கைக்கடிகாரம் மற்றும் அவரது காற்சட்டைப் பையிலிருந்த பணம் ஆகியவற்றை சிவகுமாரனின் தாயிடம் கையளித்துவிட்டு "உங்கள் மகன் ஓர் தெய்வப் பிறவி நினைத்திருந்தால் என்னைச் சுட்டிருக்கலாம்" எனக் கூறி அவரது காலில் வீழ்ந்து வணங்கியுள்ளார்.

தியாகி சிவகுமாரனின் உருவச் சிலை உரும்பிராயில் மூன்று தடவைகள் அமைக்கப்பட்டு இராணுவத்தினரால் உடைக்கப்பட்ட நிலையில் வெண்கலத்தைக் கொண்டு அமைக்கப்பட்ட நான்காவது சிலையே இன்று உரும்பிராய் சந்தை வளாகத்தில் காணப்படுகின்றது. அவரது உடல் தகனம் செய்யப்பட்ட வேம்படி மயானத்தில் நினைவுத் தூபியும் அமைந்துள்ளது. அவரது ஐம்பதாவது ஆண்டு நினைவுதினம் யூன் 5 ஆம் திகதி 2024 இல் உரும்பிராய் சிலை மற்றும் தூபி அமைந்துள்ள இடங்களில் நடைபெறவுள்ளது.

தமிழர் போராட்ட வளர்ச்சி என்பது ஒரு வகையான அஞ்சலோட்டம். அந்த அஞ்சலோட்டத்தில் ஆயுதப் போராட்டமென்ற அஞ்சலோட்டத்தை ஆரம்பித்து வைத்தது சிவகுமாரனென்றால் அது மிகையாகாது. தியாகி சிவகுமாரன் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தின் வரலாற்றுச் சின்னமாக என்றென்றும் நிலைத்து நிற்பானென்பது திண்ணம்.

**சி.தவராசா**
**முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர்,**
**வடக்கு மாகாண சபை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில்...

மைப் பொலிஸ் நிலைய போதை ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி றிஸ்வி தலைமையிலான பொலிஸார் வவுனியா, தோணிக்கல் பகுதியில் மேற்கொண்ட விசேட நடவடிக்கையின்போது விற்பனைக்காக தயார்படுத்தி வைக்கப்பட்டிருந்த 50 கிராம் ஹெரோயின் போதைப் பொருளை மீட்டனர்.

இதன்போது குறித்த ஹெரோயின் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த வவுனியா, தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த யுவதியும் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7,10,250)

## சமையல்...

படும் 12.5 கிலோ எடை கொண்ட சமையல் எரிவாயு சிலிண்டரின் புதிய விலை 3,940 ரூபாய்.

5 கிலோ எடை கொண்ட சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை ரூ.70 குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை ரூ.1,582 ஆக உள்ளது.

2.3 கிலோ எடையுள்ள எரிவாயு சிலிண்டரின் விலை 32 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 740 ரூபாயாகும்.

மேலும் லாஃப் சமையல் எரிவாயுவின் விலையையும் குறைக்க லாஃப் நிறுவனம் தீர் மானித்துள்ளது.

12.5 கிலோகிராம் எடையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 160 ரூபாயால் குறைக்கப்படவுள்ளதுடன், அதன் புதிய விலையாக 3,680 ரூபாய் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

5 கிலோகிராம் எடையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 65 ரூபாயால் குறைக்கப்படவுள்ளதுடன், அதன் புதிய விலையாக 1,477 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (ம-7,10)

## தமிழர்கள்...

ளார்.

குறித்த விடயத்தை நேற்றைய தினம் பாராளுமன்ற விவாதத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், காணிகளை பறித்தல், தமிழர்களை கைது செய்தலூடாக அச்சுறுத்துதல் அங்கே வாழுகின்ற மக்களினுடைய எண்ணங்களை சிதைக்கின்ற நடவடிக்கைகளில் அரசாங்கம் ஒரு மறைமுக நிகழ்ச்சி நிரல்களை வைத்திருப்பதைதான் எங்களால் பார்க்க முடிகின்றது.

இந்த மோசமான நிலைமைகள் மாற்றப்பட வேண்டும். நாட்டினுடைய வளர்ச்சியும் முன்னேற்றமும் ஒவ்வொரு தனிமனித செயற்பாடுகளிலும் அடங்கியுள்ளது என்றார். (ம-7,10)

## ஐ.எம்.எப்...

மூலத்திற்கு ஆதரவளிக்க வேண்டியது அனைவரினதும் பொறுப்பு என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கான "உறுமய" முழுமையான காணி உறுதிப்பத்திரம் வழங்கல் மற்றும் அரிசி மானியம் வழங்கும் நிகழ்வு கரவனெல்ல ஸ்ரீ விசுத்தாராமவில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கைகளின் பிரகாரம் நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரமாக பேணுவதற்கு பல பொருளாதார இலக்குகளைப் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளதாகவும், அந்த இலக்குகளை மீறுவது நாட்டின் பொருளாதாரத்தை அழிவுப் பாதையில் இட்டுச் செல்லும் எனவும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்

அரசியல் இலாபத்திற்காக மேடைகளில் வீணாகப் பேசிக் கொண்டிருக்காமல் நடைமுறையில் இருக்கும் கட்டமைப்பிற்குள் மாத்திரம் பேசுவது எதிரணியின் பொறுப்பு எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நாட்டிற்கான பொறுப்புகளை ஏற்காமல், சம்பிரதாய அரசியலில் ஈடுபட்டதால் எதிர்க்கட்சிகள் தொடர்ந்தும் எதிர்க்கட்சியில் இருப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதி, இந்த சவாலை அச்சமின்றி ஏற்றுக்கொண்டதால், அரசாங்கம் அதன் வெற்றிகரமான முடிவுகளை இன்று வெளிப்படுத்தியுள்ளதாகவும், எனவே நாட்டு நலனுக்காக அனைவரையும் ஒரே பாதையில் பயணிக்க அழைப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (ம-7,10)

## தி.மு.க...

மற்றும் புதுச்சேரியில் ஒரு தொகுதியென 40 தொகுதிகளில் கடந்த ஏப்ரல் 19ஆம் திகதி ஒரே கட்டமாகத் தேர்தல் நடைபெற்றது.

இத்தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் வெளியாகி வரும் நிலையில், பிற்பகல் 3.00 மணியின் நிலவரப்படி, தூத்துக்குடி மக்களவைத் தொகுதியில் 2,44,034 வாக்கு வித்தியாசத்தில் கனிமொழி முன்னிலையில் உள்ளார்.

அதன்படி, தமிழகத்தில் அனைத்து தொகுதிகளை திமுக கைப்பற்றியுள்ளது. (ம-7,10)

## நம்பிக்கை...

வரலாற்றில் இது ஒரு சாதனை எனவும் மோடி சுட்டிக் காட்டியுள்ளார்.

அதேவேளை, கடந்த பத்தாண்டுகளில் மக்களின் விருப்பங்களை நிறைவேற்றும் வகையில் நாங்கள் செய்த நல்ல பணிகளைத் தொடர்வோம் எனவும் அவர் உறுதியளித்துள்ளார்.

மேலும், இந்த வெற்றிக்காக உழைத்தவர்களுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் அவர்களின் உழைப்பை வார்த்தைகள் ஒரு போதும் நியாயம் செய்யாது எனவும் அவர் தனது பதிவில் தெரிவித்துள்ளார். (ம-7,10)

## 3வது...

இந்திய மக்களவைத் தேர்தல் முடிவுகள் தொடர்ச்சியாக வெளியாகிவரும் நிலையில், இதுவரை வெளியாகியுள்ள முடிவுகளுக்கு இணங்க பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி முன்னிலையில் உள்ளது.

மேலும், காங்கிரஸ் தலைமையிலான இந்தியக் கூட்டணி இரண்டாம் இடத்தில் உள்ள நிலையில், தமிழ் நாட்டின் 40 தொகுதியிலும் தி.மு.க. கூட்டணி வெற்றி பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் 18 ஆவது மக்களவைத் தேர்தல் கடந்த ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி முதல் ஜூன் முதலாம் திகதி வரை 7 கட்டங்களாக நடந்து முடிந்துள்ளது.

மொத்தம் உள்ள 543 தொகுதிகளில், குஜராத்தின் சூரத் தொகுதியில் மட்டும் பா.ஜ.க.வின் வேட்பாளர் முகேஷ் தலால் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டார்.

நேற்றுக் காலை முதல், மக்களவைத் தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை முடிவுகள் வெளியாகி வரும் நிலையில், இதுவரை வெளியான தேர்தல் முடிவுகளின் பிரகாரம், பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி 239 இடங்களிலும், காங்கிரஸ் தலைமையிலான இந்திய கூட்டணி 232 தொகுதிகளிலும் வெற்றி பெற்றுள்ளது.

மக்களவையிலுள்ள 543 ஆசனங்களுக்காக தேர்தல் நடைபெற்ற நிலையில், 272 ஆசனங்களை கைப்பற்றும் கட்சி அல்லது கூட்டணியே இந்தியாவின் ஆட்சி அதிகாரத்தை உறுதிப்படுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

மஹஜன சம்பத
திகதி 2024.06.04 சீட்டிழுப்பு இலக்கம் 5494
Y 1 4 6 8 5 5
அத சம்பத Y 6 8 5 5 சீட்டிழுப்பு இலக்கம் 69
தேசிய லொத்தர் சபை National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.06.04 சீட்டிழுப்பு இலக்கம் - 1524
Y 06 46 55 67 Y
Double Chance 28126

மெகா பவர்
திகதி 04/06/2024 சீட்டிழுப்பு இலக்கம் 1842
M 05 42 55 68 69
Double Chance 93054

லக்கி 7 VIP
திகதி 2024.06.04 சீட்டிழுப்பு இலக்கம் 320
X 0 8 2 3 5 1 X

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3736 சீட்டிழுப்பு திகதி 04.06.2024
X 13 19 62 68
X 39198

HANDAHANA உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.06.04 சீட்டிழுப்பு இலக்கம் 0803
மேஷம் 16 21 29 32 மேஷம்
47607 29

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுப்பர் பென சம்பத 04.06.2024 வெற்றி வாரம் 202 வர்ணம் சிவப்பு
X 4 3 5 2 3 6
48787 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.23,354,456.00
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL 2468 04.06.2024 செவ்வாய்
08 22 34 50 T
11615
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 91,593,554.40

சனிதா 2024.06.04 வெற்றி வாரம் 4629 வர்ணம் பச்சை
07 28 62 71 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.60,631,675.60
47560

சசிரி 485 2024.06.04 வியாழன்
வெற்றி இலக்கங்கள் 27 29 48
59159
ரூ.2,150,720/-

ராசி சீட்டிழுப்பு வாரம் 4180 வர்ணம் சிவப்பு சீட்டிழுப்பு திகதி 2024.06.04 தினம் செவ்வாய்க்கிழமை
36 43 46 48 மீனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,182,810.40
273395

கப்ருக ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
L 35 24 29 63 64
1644 04.06.2024 செவ்வாய்
986114
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 525,858,300.60

அத கோடிபதி ADA KOTIPATHI செவ்வாய்க்கிழமை வெற்றி வாரம் : 2294
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 117,597,498.40
05 28 60 72 Q
439806
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-0530)

**076 825 7716** (ஆகாஸ்)

## காணி விற்பனைக்கு

பலாலி விமான நிலையம் செல்லும் பாதை
மயிலிட்டி சாந்தைச் சந்திக்கு அண்மையில்
10 பரப்புக் காணியும் தெல்லிப்பளை பழைய
D.R.O office லேன் நாச்சிமார் கோவிலடியில்
3 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (1094)

**076 341 8548, 076 921 4360**

## வேலையாட்கள் தேவை

- மேசன் (Mason)
- கூலி (Labour)

தொடர்புகளுக்கு - (8.30 a.m - 5.30 p.m) (1095)

**076 200 4827, 077 558 8835**
**Lionengineering9@gmail.com**

## கண்டெடுக்கப்பட்டது

யாழ் ஆஸ்பத்திரி வீதியில் கையடக்கத்தொலைபேசி ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.
உரிமையாளர் தகுந்த அத்தாட்சிப் படுத்தி பெற்றுக்கொள்ளவும். (1102)

கனகசபை தர்மகுலசிங்கம்
**077 723 2535**

## IELTS - New Batch ஆரம்பம்

Sp. Offer 10% Discount உடன்
Basic & Advance Grammar Classes
இல.53, சிவகுருநாதர் வீதி,
Brown Rd, Jaffna.
**077 798 9830** By:-B.MURALI

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். (1097)

## விமலம் திருமண சேவை

யாழ்/ கனடா சர்வதேச சேவை
தங்கள் தேடுதலுக்கும் தகுதிக்கும்
ஏற்ற மணமகன் / மணமகள்
தேவையெனின் எம்முடன்
தொடர்பு கொள்ளவும். கனடா,
லண்டன், சுவிஸ், பிரான்ஸ்
மணமகன் / மணமகள் உள்ளன. (779)

**+1437 244 6737, +1647 657 1347**
**(கனடா) 077 240 9276 தாயகம்**

## V2 VISA SERVICES கனடா

077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS

### விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு (C-0529)

## உடனடி வேலை வாய்ப்புக்கள்

### EXECUTIVE OFFICER



- ✓ சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- ✓ வயது-22 தொடக்கம் 35
- ✓ தகுதி- பட்டதாரிகள் (C-0529) (ஆங்கில அறிவு அவசியமானது)

### V2 TRAVELS

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER
போன்ற துறைகளில் பயிற்சி அளித்து
உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம்
**0777-068-777**

## A/L தொழினுட்பப்பிரிவு

### Techna
Technical Institute

யாழ் மாவட்டத்தில் இருந்து தொடர்ந்து தொழினுட்பபாடத்தில்
அதிக மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வதற்கு வழிகாட்டும்
பெற்றோர்களினதும், மாணவர்களினதும் நன்மதிப்பை பெற்ற ஒரே கல்வி நிறுவனம்

**A/L 2026** புதிய பிரிவு ஆரம்பம்

செயன்முறை வகுப்புக்களும் நடைபெறுகின்றன

**A/L 2023 REPEAT BATCH** 05.06.2024 புதன்கிழமை மாலை 3.30மணிக்கு (C-0524)

**A/L 2024 பிரிவு**
**A/L 2025 பிரிவு** விஷேட பிரிவுகள்

மேலதிக விபரங்களுக்கு **077 170 3549**
வீரசிங்கம் மண்டபம், 3ஆம் மாடி, யாழ்ப்பாணம்.

## உடனடி வேலை வாய்ப்பு

கொழும்பில் இயங்கி வரும் SATTELITE மற்றும் கேபிள் டிவி உபகரணங்கள் விற்பனை மற்றும் சர்வீஸ் செய்யும் கடைக்கு



- டிஷ் ஆன்டென்னா பிட்டிங் செய்யக் கூடிய TECHNICIANS.
- எலக்ட்ரானிக்ஸ் REPAIR செய்யக் கூடிய TECHNICIANS.
- வேலை பழக விரும்பும் O/L அல்லது A/L படித்த இருவர் தேவை

உணவு தங்குமிடம் மற்றும் திறமைக்கு ஏற்ப சம்பளம் கிடைக்கும், வெளி மாவட்டத்தை சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது (1070)

ராஜன் **077 771 0785**

## TECHNO WORLD

### A/L தொழில்நுட்ப பிரிவு

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்ப்பாணம் (C-521)

**A/L 2023 DAY CLASS**
(இம்முறை பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்குரியது)
திகதி - 07.06.2024, வெள்ளிக்கிழமை நேரம் - 2.30 P.m

தொடர்புகளுக்கு - **077 0175 346**


# மரண அறிவித்தல்



தோற்றம் 30 - 12 - 1952

மறைவு 04 - 06 - 2024

## கந்தையா சொர்ணதேவா

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சொர்ணதேவா அவர்கள் 04.06.2024 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சரஸ்வதி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கருணாநிதி மற்றும் இராசமணி தம்பதியினரின் அன்பு மருமகனும் மஞ்சுளாவின் அன்புக் கணவரும் கருணாகரன், கலாநிதி.சிவராஜா (ஓய்வுநிலை விரிவுரையாளர் - யாழ். பல்கலைக்கழகம்), மனோகரன் (ஜேர்மனி), பாஸ்கரன்(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் இரவீந்திரன் (கனடா), சூரியகுமார் (ஜேர்மனி), ரூபகுமார் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.06.2024) புதன் கிழமை மு.ப 10.00 மணிக்கு பழைய பொலிஸ் நிலையத்தடி, ஆனைக் கோட்டையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரையாம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

க.சிவராஜா
077 553 2402 (1104)

தகவல்:
குடும்பத்தினர்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பேசாலையை வசிப்பிடமாகக் கொண்ட

## திருமதி வி.செல்வரத்தினம்

(ஓய்வு பெற்ற ஆசிரியை)



அம்மா என அழைத்தால்
ஓடிவந்து அணைப்பவளே – இன்று
அம்மா அம்மா என அலறுகின்றோம்
உங்கள் திருமுகம் காண முடியவில்லையம்மா
ஆண்டொன்று ஆனதம்மா
உங்கள் திருமுகத்தை காணவில்லை
மீண்டும் இங்கே வாராயோ – எம் வேதனை தீராயோ
கண்ணீர் ஒன்றே தஞ்சமென்று – என்
கவிதை உங்களை கெஞ்சுதம்மா
ஆழ் கடல்தான் உங்கள் அன்பு – அதில்
அலை போல் தவழ்ந்தோம் உங்கள் மடியில்
தேன் போன்று உங்கள் சிரிப்பு – அதில்
எம் கவலை எல்லாம் பறந்து விடும்
உங்கள் காலடியில் கெஞ்சுகின்றோம்
மீண்டும் நீங்கள் எம்மிடம் வந்திடம்மா
உங்கள் ஞாபகத்தில் என்றும் நாம்
வெதும்பி வெதும்பி அழுகின்றோம்
வேதனையில் தவிக்கின்றோம்
எம் குடும்பத்தின் ஒளி விளக்காய்
ஒளிர்ந்தவளே அம்மா
நீங்கள் அணைந்து ஓராண்டு ஓடி மறைந்தாலும்
உங்கள் சிரித்த முகத்தை முன் நிறுத்தி
என்றும் உங்கள் நினைவுடனே வாழுகின்றோம்
எமக்காய் நீங்கள் இங்கே மறுபடியும்
வந்து பிறந்திடம்மா

பிறப்பு: 1930.11.28

இறப்பு: 2023.05.18

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

078 581 5998/ 077 497 4108 (C-0522)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.06.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org